Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-18

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-12 25-01-2005 செவ்வாய்க்கிழமை ஓசை -342




# ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்தல் இல்லையென்ற சனாதிபதியின் கூற்று சனநாயக விரோதமானது

## -எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கண்டனம்

**எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டில் தேர்தல் எதுவும் நடத்த முடியாது என சனாதிபதி கூறியிருப்பது சனநாயக விரோதமானது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடந்த வாரம் அம்பாந்தோட்டைப் பகுதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சனாதிபதி நாட்டில் எதிர் வரும் ஐந்து வருடங்களுக்குத் தேர்தல் நடத்தப்படமாட்டாது எனத் தெரிவித்திருந்தார்.

சனாதிபதியின் இந்தக் கருத்தானது நாட்டின் சனநாயக உரிமைகளைப் பறிக்கும் செயல் இது சுனாமி அனர்த்தம் என்பதை தெரிவித்தவாறே சனநாயகத்தைப் பறிக்கும் சனாதிபதியின் இந்தச் செயற்பாட்டைஅனுமதிக்க முடியாது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன்-ஹெல்கேசன் சந்தித்துக் கலந்துரையாடல்

நோர்வேப்பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அவர்கள் நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளி நொச்சிக்கு வருகைதந்த இவர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ள போதும் எவ்விடயம் தொடர்பாகப்பேசப்பட்டதென்பது பற்றித் தெரியவரவில்லை.

### சுனாமி நிவாரணச் செயற்பாடுகள் குறித்து

## வடக்கு-கிழக்கு அரச உயரதிகாரிகளுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆராய்வு



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் குறித்து நேற்று விடுதலைப்புலிகளின் திட்டமிடற்செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் ஆழமாக ஆராயப்பட்டது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் எட்டு மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தை பொலிஸ் நிலையமருகே தமிழ் இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் தமிழ் இளைஞர் ஒருவர் மீது நேற்று இரவு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.33 ஆவது ஒழுங்கையில் வைத்து இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு துப்பாக்கி ரவைகள் பாய்ந்த நிலையில் களுபோவில வைத்திய சாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. காயமடைந்தவர் ஜெகன் என அடையாளம் காணப் பட்டுள்ளபோதிலும் இவர் குறித்த மேலதிக விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை .இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினராக இருக்கலாம் என சிலதரப்புக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

### வீரவணக்கம்

22.01.2005 அன்று ஏற்பட்ட வாகன விபத்தொன்றின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.2ஆம் லெப்-இறையவன் (சுந்திரவதனன்-கமலேஸ்வரன் திருகோணமலை,உப்புவெளி, செல்வநாயகபுரம் த.மு.துன்னாலை, மேற்கு கரவெட்டி) என்ற போராளியே சாவடைந்தவராவர். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருட்களை தமது முகாமில் பதுக்கும் ஈ.பி.டி.பி யினர்

வடமராட்சி மந்திகையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் முகாம்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கெனக் கொண்டுவரப்படும் பல பாரவூர்தி, நிவாரணப் பொருட்கள் பதுக்கப் பட்டு வருகின்றன.

இம் முகாமில் இரண்டு நாட்களாக பல இலட்சம் ரூபாபெறுமதியான நிவாரணப் பொருட்கள் பாரவூர்திகளில் கொண்டு வரப் பட்டு பதுக்கிக்கொண்டு தாம் மக்களுக்கு நிவாரணப் பணிகளை மிகத் தீவிரமாகச் செய்து வருவதாகப் பொய்ப்பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

ஆனபோதும் ஈ.பி.டி.பி தேச விரோதிகளால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை வழங்கும் நிலைக்கு மக்கள் இல்லை. இவ்வாறு வல்வை சிதம்பராக் கல்லூரிக்கு கடந்த சனியன்று பல வாகனங்களில் சென்றிருந்த ஈ.பி.டி.பி தேசவிரோதிகளை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் ஓட ஓட விரட்டியடித்துள்ளனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கவில்லை அரசாங்கத்திலிருந்து விலக இ.தொ.க.ஆலோசனை

சந்திரிகா அரசாங்கத்திலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விலகவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.கடந்த 22ஆம் திகதி கொட்டகலையில் நடைபெற்ற கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது. ஏற்கனவே சனாதிபதி உறுதி அளித்த இரண்டு அமைச்சர் மற்றும் இரண்டு பிரதி அமைச்சர் பதிவிகளை இதுவரை வழங்காமையினை அடுத்தே அரசாங்கத்தில் இருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விலகுவது குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது ஒரு அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளே இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கு வழங்கப்பட்டுள்ளன. புதிதாக இரு அமைச்சர்களை நியமித்தால் ஜே.வி.பி.யுடன் செய்து கொண்ட உடன் படிக்கை பாதிக்கப்படும் என சனாதிபதி

(18 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் உயிரிழந்த மக்களை நினைவுகூர்ந்து நாளை நிகழ்வுகள்

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வுகள் நாளை புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வடமராட்சிக்கிழக்கு கிளிநொச்சி,வவுனியா ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இம்மக்களை நினைவு கூரும் முகமாக முல்லை நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எச்சத்திலும் எழுவோம் என்ற மகுட வரிகளுடனான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது.

"அத்துடன் அன்றைய தினம் துக்க தினமாகப் பிரகடனம் செய்து கறுப்புக்கொடிகளை ஏற்றுமாறும் நாளை காலை சுனாமி தாக்கிய நேரமான 8.50 இலிருந்து 8.52 வரை பிரிந்த உறவுகளை நினைத்து அக வணக்கம் செலுத்துமாறும் அனைத்து ஆலயங்களிலும் 8.52 தொடக்கம் 8.55 வரை மணி ஒலி எழுப்பி ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவுமாறும் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் வேண்டியுள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் கரையோரப் பகுதிகள் மீது இடம்பெற்ற சுனாமி கடல் கொந்தளிப்புக் காரணமாகப் பலியான மக்களை நினைவுகூரும் நிகழ்வு நாளை காலை 8.50 மணிக்கு புதுக்குடியிருப்பு ஒட்டு

(18 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் உயிரிழந்தோரின் அஞ்சலி நிகழ்வுக்கு அதிரடிப்படை தடை

அம்பாறை விநாயகபுர நலன்புரி நிலையத்தில் அஞ்சலி நிகழ்விற்கு விசேட அதிரடிப்படையினர் தடை விதித்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்தோரின் 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்விற்கு ஆரம்ப ஆயத்தங்கள் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற அதிரடிப்படையினர் அந்நிகழ்வு இடம்பெறவிடாது தடுத்துள்ளனர்.

படை உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்றே நிகழ்வுகள் நடத்தப்படவேண்டும் என அதிரடிப்படையினர் தெரிவித்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த மக்களுக்கும், அதிரடிப்படையினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் அதிரடிப் படையினரைத் திட்டித் தீர்த்தனர். பெண்களையும், குழந்தைகளையும் பல உறவுகளையும் இழந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்குக் கூட அனுமதி இல்லையா என கூச்சல் குரல் எழுப்பினர். (48)

# ‘எச்சத்திலும் எழுவோம்’ என்ற மகுடவரிகளுடன்

# முல்லை நகரில் நாளை மாபெரும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

## -கல்விப்புலத்தினர் ஏற்பாடு

**“எச்சத்திலும் எழுவோம்” என்ற மகுடவரிகளுடன் மாபெரும் ஆற்றுப் படுத்தல் நிகழ்வு நாளை காலை 8.45 மணிக்கு முல்லை நகரில் ஆரம்பமாகவுள்ளது. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உறவு களை ஆற்றுப்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வு நடாத்தப்படவுள்ளது.**

இது தொடர்பாக முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் விடுத்துள்ள பிரசுரத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது ;

26.12.2004 ஆம் நாள் ஏற்பட்ட அலைக்கோள் காணரமாக எம்மைப் பிரிந்த மாணவர்கள், ஆசிரியர்கள்,மக்களை நினைவு கூருவதுடன் எஞ்சித்தவிக்கும் உறவுகளை தேற்றி மீண்டும் வாழ் வுக்கு வழி செய்ய 26.01.2005 ஆம் நாள் “எச்சத்திலும் எழு வோம்” என்ற மகுட வரிகளுடன் மாபெரும் ஆற்றுப்படுத்தல் நிழக் வொன்றினை கல்விப் புலம் செய்வதற்கு ஆவன செய்யப்பட் டுள்ளன. 300 இற்கு மேற்பட்ட மாணவர்களை இழந்து 3000 மக் கள் அழிந்து பல பள்ளிகளை, அலுவலகங்களை, வீடுகளை இழந்து வனப்பின்றி வாடும் அத் தேசத்தையும் வாழ்வுக் குமுற லோடு ஊசலாடும் எஞ்சிய உறவு களையும் நாம் துன்பத்துடன் வாழ விட முடியாது. எனக்குறிப் பிட்டுள்ள அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;

முல்லை மண் மூப்புடைய மண்,கல்லும் கடலலையும் வளங் கள் வாரித்தந்த மண், பண்டார வன்னியனுக்கு வீரவரலாறு பதித்த மண், ஓயாத அலையால் வீரம் விளைந்த மண். இந்த மண் ணில் இயற்கையும் போர் புரிந்து விட்டது. ஆனாலும் அந்த மண் வெட்ட வெட்டத் தளைத்த மண் என்பதை அறிவோம். அறுகம்புல் போன்று அழிந்தாலும் மீண்டும் விளைந்தமையை உணர்வோம். அதுபோல சுனாமி அழிவில் இருந்தும் தேசத்தையும் உறவு களையும் மீட்டிடுவோம். அவர் களை வாழ்வியலில் வாழ வாழி சமைப்போம். எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் நாளை காலை 8.45 மணிக்கு தேசியக் கொடியேற்றல் நிகழ்வுகள் ஆரம் பமாகி 8.50 - 9.10 வரை சமய வழிபாடுகளும் அதனைத்தொடர் ந்து சுனாமியின் அவலத்தை அர ங்கத்திற்கு ஊடாக வெளிக் கொணரல். எஞ்சிய வளங்களை கட்டி எழுப்புதல்(அரங்கச் செயற் பாடு) ஆகிய நிகழ்வுகள் நடை பெறவுள்ளது.

மேலும் அதில்,அன்பான மக் களே! நிலையில்லா வாழ்வை அலைகோள் உணர்த்தி விட்டது. நிலைத்து நாம் வாழும் காலம் நலத்துடன் வாழவேண்டும். அந்த நலத்தை முல்லை மக்களிடம் கட்டி எழுப்ப அனைவரும் ஒன்று படுங்கள். எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திரு முறிகண்டியில் வீதி விபத்து

## உந்துருளியில் சென்ற இருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

நேற்று திருமுறிகண்டிப் பகுதியில் ஏற்பட்ட வீதி விபத்தின் போது இருவர் படுகாயமடைந்ததோடு உந்துருளியும் கடும் சேதத்திற்குள்ளா னது. நேற்றுக் காலை 10.30 மணியளவில் திருமுறிகண்டிப்பகுதியில் கன்டர் ரக பாரவூர்தியும் உந்துருளியும் மோதிக்கொண்டன. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, திருமுறிகண்டியிலிருந்து கிளி நொச்சி நோக்கிப் பயணித்த உந்துருளி முன்னால் சென்று கொண் டிருந்த பாரவூர்தியைக் கடக்க முற்பட்ட வேளை கிளிநொச்சியிலிருந்து திருமுறிகண்டி நோக்கி சென்று கொண்டிருந்த கன்டர்ரக பாரவூர்தியில் மோதியது. இதன்போது உந்துருளியில் பயணித்த இருவரும்



படுகாயமடைந்தனர். படுகாயத்திற்குள்ளான 6ஆம் கட்டை வவுனிக்குளத்தை சேர்ந்த 31 வயதுடைய வைத்திலிங்கம் ராசேந் திரம்,வீரபுரம், வவுனியாவைச் சேர்ந்த 42 வயதுடைய சுப்பிரமணியம் இராசரத்தினம் ஆகிய இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.பாரவூர்தியை கடப்பதற்காக மிக வேகமாக உந்துருளியைச் செலுத்தியதனாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகவும் தெரியவரும் அதேவேளை வேக எல்லை 40 கிலோமீற்றர் என வரையறுக்கப்பட்ட பகுதியிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

## சுனாமியால் சேதமடைந்த படதுகள்

## வடமராட்சி கிழக்கில் புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி கடல் பேரலைகளில் சிக்குண்டு சேதமடைந்துள்ள மீன்பிடிப் படகுகளை திருத்தும் நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் எம்.எம்.எஸ். நிறுவனம் வடமராட்சி கிழக்கில் ஆரம்பித்துள்ளது.



கடந்த மூன்று தினங்களாக இந்தநடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. வடமராட்சி கிழக்கு மீனவர்களின் மீன்பிடிப்படகுகள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளன. சிறுசேதங்களுக்குள்ளான படகுகள் மேற்படி நிறுவனத்தால் திருத்தம் செய்யப்பட்டு மீளப்பயன் படுத்து வதற்காக வழங்கப்படுகிறது. இப்பணியில் பெண்கள் ஈடுபட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## தெல்லிப்பழைப் ப.நோ.கூ. சங்க தலைமைச் செயலகம் திறப்பு

(நல்லூர்)

வலிவடக்கு இராணுவ உயர்பாதுகாப்புவலயத்தில் அமைந் துள்ள தெல்லிப்பழை பலநோக் குக் கூட்டுறவுச்சங்க தலைமைச் செயலகம் மற்றும் விற்பனை நிலையங்கள் புனரமைப்புச் செய் யப்பட்டு நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

80 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்கட்டடத் திறப்பு விழா நேற்றுக்காலை சங் கத்தலைவர் சிவமகராசா தலை மையில் இடம்பெற்றது.

சங்கக் கட்டடத்தை முன்னாள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் தற்போதைய உலக வங்கியின் வீடமைப்பு புனரமைப்புக்கான திட்டப்பணிப்பாளர் சி.பத்மநாதன் திறந்துவைத்தார். (41)

## நடமாடும் சேவை மூலம்

## காணி உரிமப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேசசெயலகக் காணி அலுவலகத்தினரால் நட மாடும்சேவை மூலம்காணி உரிமப் பத்திரம் வழங்கல் மற்றும் தற் காலிகக் காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரங்களாக மாற்று வதற்கான நடவடிக்கைகள் தற் போது மேற்கொள்ளப்பெற்று வரு கின்றன.

இதனடிப்படையில் இன்று கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராம மக்களின் காணி சம்பந்த மான நடவடிக்கைகள் கிளி உதய நகர்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ள தெனவும், மேற்படி பிரதேசத்தில் காணி நடவடிக்கையினை மேற் கொள்ளவுள்ள காணி உரிமை யாளர்கள் அதற்குரிய தகுந்த ஆவணங்களுடன் சமுகம் தரும் வண்ணமும் கிளி.கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் வேண்டியுள் ளார். (சோ)

## இருதய சிகிச்சை நிபுணரின்

## விசேட சிகிச்சையும் ஆலோசனைகளும்

ஐக்கிய இராச்சியம் (U.K)இலிருந்து வருகை தந்திருக்கும் இருதய சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி ரஞ்ச தயாளன் அவர்கள் M.B.BB (Cey),M.D(Cey),FR.C.P(Lon) இன்று செவ்வாய் நாளை மறுதினம் வியாழன் ஆகிய தினங்களில் கிளி.பொன்னம்பலம் வைத் திய சாலையிலும், 28.01.2005,29.01.2005 வெள்ளி,சனி ஆகிய நாட்களில் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையிலும் காலை 8.30 மணியிலிருந்து பி.ப.2 மணிவரை சிகிச்சைகள் மேற்கொள்ளவுள்ளார். பயன்பெற விரும்பும் நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

## புதுக்குடியிருப்பு மருத்துவமனையில்

## சர்வதேச செஞ்சிலுவை மருத்துவக்குழு

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் சர்வதேச செஞ்சி லுவைச் சங்க மருத்துவக் குழுவினர் நேற்றுத்தொடக்கம் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர். இக்குழுவில் சத்திரசிகிச்சை நிபுணர் கள் இருவர், குழந்தை வைத்தியர் ஒருவர்,பொது மருத்துவர் உட்பட்ட குழுவினரே வருகை தந்துள்ளனர். மேலும் எக்ஸ்றே வசதி, ஆய்வுகூட வசதிகள் என்பனவற்றை இவர்கள் ஆரம்பித்துள்ளனர். மேலும் சில வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்தித்தருவதாக அவர்கள் உறுதியளித் துள்ளனர். ஜேர்மன்,பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வைத்தியர் குழுவினரே இங்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

பாக்கியராசா சிறிதரன் என்பவரு டைய 6 பிலிம்ரோல் போட்டோ பேக்குடன் 2005.01.24 ஆம் திகதி சேவியர்கடை சந்திக்கும் கிளி நொச்சி கந்தசாமி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் ஜனவி லேனர்ஸ், சேவியர்கடை சந்தியில் ஒப் படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் பா.சிறி தரன் செல்வாநகர், கிளிநொச்சி. (5606)

### SCIENCE HALL

புதுக்குடியிருப்பு

2007- கணித விஞ்ஞானப் பிரி வுகள்9,10,11 இற்கான கணி தம்,ஆங்கிலம்,விஞ்ஞானம், விவசாயம்,தரம் 5 (புலமைப் பரி சில்)வகுப்புகள்ஆரம்பம் 24.01.2005 (24.01.2005) பாடக்கட்டுப்பாடு கள் இல்லை. நிர்வாகி.(5100)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு, 02 ஆம் வட் டாரத்தில் 01 ஏக்கர் காணி விற் பனைக்குண்டு. தொடர்புகளுக்கு குணம் தேநீர்க்கடை,தீன்சுவை அருகாமை,முல்லைசாலை புதுக் குயிருப்பு. (5097)


## கண்ணீர் அஞ்சலி



திரு.ஆறுமுகம் - இராசரத்தினம்

24.01.2005இல் காலமான எமது வாணிபப் பணியாளராகிய திரு.ஆறுமுகம் —இராசரத்தினம் அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்
பணிப்பாளர்,பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள், மருதம் வாணிபம்.

(5607)

# முஸ்லிம் தீவிரவாதிகளை வெளியேற்ற ஜெர்மனியில் புதிய குடியேற்றச் சட்டம்

(பெர்லின்)

**ஜெர்மன் நாட்டில் தீவிரவாதச் செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்காக அந்த நாட்டில் குடியேறியுள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளை வெளியேற்றும் நடவடிக்கையாக புதிய சட்டம்கொண்டு வரப்பட்டுள்ளது.**

ஜெர்மனியிலுள்ள ஹம்பர்ப் நகரில் தங்கி மேற்படிப்பு படித்த அரபு நாட்டு மாணவர்கள் தான் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவில் விமானங்களைக் கடத்தி தாக்குதல் நடத்தினார்கள் என தெரிவிக்கும் ஜெர்மனி இது வெளி உலகத்துக்குத் தெரிய வந்தது முதல்ஜெர்மன் நாட்டின் குடியேற்றச் சட்டம் கடுமையாக இல்லாதது குறித்து ஜெர்மனியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலவாழ்வு உதவித் தொகையையும் மாணவர் தீவிரவாதிகள் பெற்று வருவது குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதன் காரணமாக புதிய குடியேற்றச்சட்டம் இந்தமாதம் கொண்டுவரப்பட்டது. அதன் கீழ் தீவிரவாதிகளை வெளியேற்றுவது எளிதாக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் படி இஸ்லாமியத் தீவிரவாதிகளை ஜெர்மனியைவிட்டு வெளியேற்ற ஜெர்மனி நடவடிக்கை எடுத்து வருகின்றது. நூற்றுக்கணக்கான முஸ்லிம் தீவிரவாதிகளின் பட்டியலை அதிகாரிகள் தயாரித்து வருகின்றார்கள். வெளியேற்றப்பட இருப்பவர்கள் புதியசட்டப்படி அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரமுடியாது புனிதப் போருக்கு அழைப்பு விடுக்கும் வீடியோ நாடாக்களை விநியோகிப்பதும் இந்தச் சட்டப்படி குற்றம் ஆகும் இந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் வெளியேற்றப்படுவார்கள். அது போல அல்ஹைதா முகாமில் பயிற்சி பெற்றவர்கள் என்று அடையாளம் காணப்பட்டாலும் வெளியேற்றப்படுவார்கள் என்றும் ஜெர்மனி தெரிவித்துள்ளது.



இந்தோனேசியாவில் நேற்று ஏற்பட்ட 6.2 ரிச்டர் அளவு புவி நடுக்கத்தால் சேதமடைந்துள்ள வீதி

## அல்ஹைய்தா தீவிரவாதிகள் ஜெர்மனியில் பிடிபட்டனர்

ஜெர்மனியில் நேற்று 2 சர்வதேசதீவிரவாதிகளை பொலிசார் கைது செய்துள்ளனர். அவர்களில் ஒருவன் 29 வயதுடைய ஈராக் நாட்டைச் சேர்ந்தவர். அல்ஹைய்தா தீவிரவாத அமைப்பின் மூத்த உறுப்பினர். இன்னொருவர் 31 வயதான பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்தவன். இவர் ஈராக் மீது தற்கொலை தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தார். மேற்கண்ட தகவலை ஜெர்மனியில் அரசு வக்கீல் கே.ரெஹ்ம் தெரிவித்தார்.



ஈராக்கில் கைதுசெய்யப்பட்ட இரு பணயக்கைதிகளை பராமரிப்பு நிலையத்துக்கு அழைத்துச்செல்லும் ஈராக்கின் 507 ஆவது தேசிய படைப் பிரிவுச் சிப்பாய்.

## இஸ்ரேலுடனான போர் நிறுத்தத்திற்கு தீவிரவாத இயக்கங்கள் சம்மதம்

### -இஸ்ரேலிய அமைச்சர் ஷால் மொபல் தெரிவிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல் மற்றும் வன்முறைகளை நிறுத்திக் கொள்வதற்கு ஹமாஸ் தீவிரவாத இயக்கம் சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை இஸ்ரேல் இராணுவ அமைச்சர் ஷால் மொபஸ் தெரிவித்தார். பாலஸ்தீனத்தலைவர் மக்மூத் அப்பாஸ், ஹமாஸ் தலைவர்களை சந்தித்துப் பேசினார். அப்போது போர் நிறுத்தத்துக்கு அவர்களின் சம்மதத்தை அவர் பெற்றார்.

இஸ்லாமிக் ஜிஹாத், அல் அக்சா தியாகிகள் படை 'பதா' இயக்கம் ஆகியவை போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக தீவிர வாதிகள் குழுக்களுக்கும் அப்பாஸ்சுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் இஸ்ரேல் மந்திரி கூறினார்.

## ஈராக் வைத்தியசாலையில் தீயில் கருகி 14 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் நசிரியா நகரில் உள்ள ஆஸ்பத்திரியில் தீ பிடித்தது. இதில் 14 பேர் உடல் கருகிப் பலி;75 பேர் காயம் அடைந்தனர். இந்தப்பகுதி முழுவதும் இத்தாலி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. 4 இத்தாலி இராணுவ அம்பியூலன்ஸ்சுகள் மூலம் வைத்தியசாலையில் இருந்து நோயாளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். இதில் மரணமடைந்த அனைவரும் ஈராக்கியர்களே தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. மின்சாரக் கோளாறு காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## தேர்தலை முன்னிட்டு ஈராக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(பாக்தாத்)

ஈராக்கில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதையடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஈராக்நாட்டில் வருகிற 30 ஆம் திகதி பாராளுமன்றதேர்தல் நடக்க இருக்கிறது. இந்தத் தேர்தலின் போது தற்கொலைப் படைகள் மூலம் வாக்குச் சாவடிகள் மீது தொடர் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த தாக்குதலை முறியடித்து,வாக்குச்சாவடிகளை பாதுகாக்க அமெரிக்க ஈராக் இராணுவம் விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

வாக்குச் சாவடிகளில் அமெரிக்க வீரர்கள் தங்கி இருக்கவும் திட்டமிட்டு உள்ளனர். வாக்குச் சாவடி எங்கேஅமைக்கப்படும் என்பதும் கடைசி நேரம் வரை ரகசியமாக வைத்துக் கொள்ளப்படும் ஊரடங்கு உத்தரவு, மாநிலம் விட்டு மாநிலம் செல்லத்தடை, பொதுமக்கள்ஆய்துங்களை எடுத்துச் செல்லத்தடை போன்ற நடவடிக்கைகள் வாக்கு பதிவு அன்று எடுக்கப்பட இருக்கிறது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்ட இங்கிலாந்தில் இசை நிகழ்ச்சி

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு நிதி திரட்டுவதற்காக இங்கிலாந்து நாட்டில் மிகப்பெரிய அளவில் இசை நிகழ்ச்சி நடந்தது. இதில் 60 ஆயிரம் ரசிகர்கள் கலந்துகொண் டனர்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமித் தாக்குதலில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேர் பலியானார்கள். இந்தோனேஷியா, தாய்லாந்து, இலங்கை, இந்தியா உட்பட 13 நாடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டன. இலட்சக்கணக்கானவர்கள் வீடு வாசல்களையும், உடமைகளையும் இழந்தனர். அவர்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்வதற்காக உலக நாடுகள் முன்வந்து நிதி உதவிகளை அளித்துள்ளன. இந்த நிலையில் அமெரிக்காவில் ஹொலிவூட் நடிகர்கள் கடந்த வாரம் கலை நிகழ்ச்சிகள் நடத்தி நிதி திரட்டினர்.

இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் இசை நிகழ்ச்சி மூலம் நிதி திரட்டப்பட்டது. உலகப் புகழ் பெற்ற'ராக்' 'பாப்' சாஸ்திரிய இசைக்கலைஞர்கள் இதில் கலந்து கொண்டனர்.

வேல்சில் உள்ள கார்டிப் என்ற இடத்தில் மில்லேனியன் மைதானத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது. கடந்த 20 ஆண்டுகளில் முதன் முறையாக மிகப்பிரமாண்டமான முறையில் இந்தநிகழ்ச்சி நடத்தப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பிரபல இசைக் கலைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டுபாடினர். 20 ஆண்டுகளுக்கு முன்பு 1984ஆம் ஆண்டு ஆப்பிரிக்க மக்களுக்கு உதவுவதற்காக இது போல உதவி இசைநிகழ்ச்சி பிரமாண்டமாக நடத்தப்பட்டது. அதன்மூலம் 555கோடிரூபாய் திரட்டப்பட்டது.





சென்னை கடற்கரை காமராஜர்சாலையில் நேற்று குடியரசுதினவிழா அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது. இதில் ஏவுகணை ஒன்று கொண்டு வரப்பட்ட காட்சி.

## 84 வயது பள்ளி மாணவன்

உலகிலேயே மிக வயதான பள்ளி மாணவர்கென்யா நாட்டில் இருக்கிறார். அவர்பெயர் கிமானி மருகே வயது 84,கப்கெண் டூய்போ நகரிலுள்ள தொடக்கப்பள்ளிக் கூடத்தில் அவர் கடந்த ஆண்டு சேர்ந்தார். அவர் சிறுவனாக இருந்தபோது மாடுமேய்க்க வேண்டியிருந்ததால் பள்ளிக்கூடம் சென்று படிக்க முடியவில்லை. கல்விக் கட்டணத்தைக் கடந்த ஆண்டு அரசு இரத்துச் செய்ததும், அவர் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிக்க ஆசைப்பட்டார். அதனால் பள்ளிக் கூடத்தில் முதல்வகுப்பில் சேர்ந்தார். படிப்பில்முதலாவதாகத் தேறினார்.

தலைமை ஆசிரியை ஜேன் ஒபிஞ்சு கூறுகையில்; ,"கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அவருக்கு இருந்த ஆர்வம் என்னை ஈர்த்தது. அதனால் அவரைச் சேர்த்துக் கொண்டேன்" என்றார்.



இந்தோனேசியாவில் வர்த்தக நிலைய முகாமையாளர் ஒருவர் சுனாமித்தாக்கத்தின் பின் தமது வர்த்தக நிலையத்தை மீளமைக்கிறார்.



மணிலாவில் கைப்பற்றப்பட்ட போலிடொலர் நோட்டுக்களை பத்திரிகையாளருக்குக் காண்பிக்கும் பிலிப்பைன்ஸ் பொலிஸ் அதிகாரி.

# அளம்பில், செம்மலை கரையோர கிராம மக்களை நாயாற்றில் நிரந்தரமாக குடியேற்ற ஏற்பாடு

– துரித கதியில் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(அலுவலகசெய்தியாளர்)

**கடந்த மாதம் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தினால் அழிவுகளுக்கு உட்படுத்தப்பட்ட அளம்பில், செம்மலை கரையோர கிராம மக்களை நாயாற்றுப் பகுதியில் நிரந்தரமாகக் குடியேற்றும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.**

கடல் அனர்த்தத்தினால் முல்லைத்தீவுப் பகுதியுடன் சேர்த்து அளம்பில், செம்மலை நாயாறு போன்ற பகுதிகளில் கரையோரப்பகுதிகள் பெரும் அழிவுகளுக்குள்ளாகியுள்ளது. அங்கு குடியிருந்த மக்களை பாதுகாப்பான முறையில் நிரந்தரமாகக் குடியேற்றும் நோக்குடன் மேற்படி வேலைத் திட்டம் நடைபெற்று வருகிறது.

இந்தக் குடியிருப்புக்கள் யாவும் நாயாற்றுப் பகுதியில் மேட்டு நிலமாகக் காணப்பட்ட பகுதியில் ஏற்கனவே பல குடும்பங்கள் குடியேற்றப்பட்ட இடத்தில் இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களையும் குடியமர்த்துவதற்கு அந்தப் பகுதியில் உள்ள இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

மிகவும் துரித கதியில் வேலைகள் நடைபெற்று மக்களை குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு.ச)



# கிராமிய வைத்தியசாலைகளுக்கு மின் பிறப்பாக்கிகள் வழங்கல்

(மன்னார்)

மன்னாரில் நீர்ப் திட்டத்தினூடாக நான்கு வைத்தியசாலைகளுக்குத் தலா 3 இலட்சம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய வைத்தியசாலைகளான பேசாலை, வங்காலை, எருக்கலம்பிட்டி, நானாட்டான் வைத்தியசாலைகளுக்கே இவ் மின் பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மின்சார இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்ட நிறைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது அணிமுகிழ் நிலை ஆசிரியர்களுக்கான பட்ட நிறைவு விழா எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் 26ஆம் திகதி நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.கமலநாதன் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)



அதி வேகமாக பிரதானசாலைகளில் உந்துருளிகளை ஓட்டிச் செல்வதன் காரணமாக தினம் தினம் பல விபத்துக்கள் இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகிறது. கிளிநொச்சி நகரில் நேற்று முன்தினம் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்ற எட்டு வயது மாணவி ஏ-9வீதியை கடக்க எத்தனிக்கையில் வேகமாக வந்த உந்துருளி மோதியதால் காயமடைந்தார். வீதியின் மத்தியில் மாணவியின் பாடசாலை உபகரணங்கள் சிதறுண்ட நிலையில் உள்ளதனைப் படத்தில் காணலாம்.

(படம்– சோதி)

# வடக்கு– கிழக்கில் சுனாமியால் பாதிப்புற்றோருக்கான உதவிகள் உரிய வகையில் கிடைக்க வழிசெய்ய வேண்டும்

–ஆலோசனைக் கூட்டத்தில் இரா.சம்பந்தன்

(திருமலை)

வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு பாதிப்புக்கு ஏற்ப முறையாக நிவாரணம், புனர் வாழ்வு மற்றும் புனர் நிர்மாண உதவிகள் வழங்கப்பட வேண்டும். வேறெந்த விதத்திலும் வழங்கப்படக்கூடாது; அவ்வாறு வழங்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் இரா.சம்பந்தன் சனிக்கிழமை மாலை திருகோணமலையில் நடைபெற்ற சுனாமி அழிவு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்கள், புனர்நிர்மாணத் திட்டங்கள் மற்றும் புனர் வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பது பற்றிய கூட்டமாக இது அமைந்தது. எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் தலைமை வகித்தார்.

இரு தசாப்த கால யுத்த அழிவுகள் இன்னும் நிவர்த்தி செய்யாத நிலையில் சுனாமி மீண்டும் வடக்கு கிழக்கை சிதைத்துள்ளது. இந்த நிலையில் வடக்கு கிழக்கில் மேற் கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனர் நிர்மாணப் பணிகள் மக்களை அவர்கள் இருந்த நிலைக்கு கொண்டு வரக் கூடியதாக அமையக் கூடாது. இருந்திருக்க வேண்டிய நிலைக்கு கொண்டு வருவதாக அமைய வேண்டும் என்று சம்பந்தன் கூறினார்.

வடக்கு கிழக்கு மக்களுக்கு உதவப் பல நாடுகள் ஆர்வம் காட்டுகின்றன. சர்வதேச சமூகம் எமக்குப் பரிபூரணமாக உதவுவதற்குத் தயாராக இருக்கிறது. இதனை நாம் இழக்க முடியாது. இதனை முழுமையாக நாம் பயன்படுத்த வேண்டும். இதற்குத் தேவையான திட்டங்களை நாம் தயாராக வைத்திருக்க வேண்டும். அவ்வாறான திட்டங்கள் எவராலும் நிராகரிக்கப்பட முடியாதவாறு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் பேசும் போது " வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்பக் கூடிய சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்த வேண்டும். நீண்ட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் இப்போது இயற்கை அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை முறையாகத் திட்டமிட்டு பயன்படுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார். திருகோணமலை உவர் மலை விவேகானந்த கல்லூரியில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

# அம்பாறையில் சுனாமியால் பாதிப்புற்றோரை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தும் அதிரடிப்படை!

-துண்டுப்பிரசுரமும் மக்களால் வெளியீடு

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட கரையோர மக்களை துன்புறுத்தும் நடவடிக்கையில் சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டு வருவதாக அம்பாறை மாவட்ட மக்களால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை பல்வேறு கோணங்களில் துன்புறுத்தும் அதிரடிப் படையினரைத் தாக்கும் முயற்சியிலும் அம்பாறை மாவட்ட மக்கள் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச நாட்டுப் படைகளுடன் நலன்புரி நிலையங்களுக்குச் செல்லும் அதிரடிப் படையினர் அங்குள்ள மக்களுக்கு உயிர்ச்சத்து மருந்துகளை வழங்குவதாகக் கூறி கருத்தடை மாத்திரைகளை வழங்குவதாகவும் மக்களை மத மாற்றம் செய்யும் வகையிலும் வற்புறுத்தி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது இந்நடவடிக்கைகளைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்து துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்காவில் இந்திய அனல் மின்உலை!

இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் 300 மெகாவோட் அனல் மின்சாரத்தை சிறிலங்காவுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைகளை சிறிலங்கா அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ள இந்திய மின்சார கூட்டுத்தாபனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சி.பி.ஜெயன் இது தொடர்பாக தாங்கள் மிகவும் ஆர்வமுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார். பாரத ஹெவி மின்சார நிறுவனத்துடன் சிறிலங்கா மின்சார சபையும் இணைந்து சுமார் 15பில்லியன் ரூபா செலவில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனை நிர்வகிப்பது தொடர்பாக இதுவரை எதுவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.



பரந்தன் குமரபுரம் 9ஆம் குறுக்குப் பகுதியில் உள்ள வயல் வெளிகளை அண்டிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட மிதிவெடி,கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கையில் மைக் நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்– சோதி)

# சுகாதாரத் தொண்டர்களுக்கு ஏன் இந்த அவலநிலை?

பல ஆண்டு காலமாக நாம் சுகாதாரத் தொண்டர்களாக சேவை செய்து வருகின்றோம். மக்கள் சேவை மகேசன் சேவை என்பது போல் நாம் பல நெருக்கடியின் மத்தியிலும் சேவை செய்து வந்தோம். கடந்த கால போர் காலத்திலும் சரி மழை வெள்ள நெருக்கடியிலும் சரி பல தொற்று நோய்கள் மத்தியிலும் சரி நாம் எம்மைத் தியாகம் செய்து சேவை செய்து வந்தோம்.

எம்மை என்றோ ஒருநாள் உள்வாங்குவார்கள் என்ற நம்பிக்கையில் பல தொண்டர்கள் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தமது சேவை யைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். பல வைத்தியசாலைகளின் ஆளணிப்பற்றாக் குறையைக் கூட இந்தத் தொண்டர்கள் நிவர்த்தி செய்கின்றனர். தொண்டர் ஆசிரியர்களை பரீட்சை இன்றி உள்வாங்குவது போல எம்மையும் உள்வாங்கலாம் அல்லவா. எம்மை உள்வாங்குவது சாதாரண சிற்றூழியர்களாகத்தான்; சிற்றூழியருக்கு ஏன் எழுத்துப் பரீட்சை? அனுபவ ரீதியிலும் தகுதி அடிப்படை ரீதியிலும் எம்மை உள் வாங்கலாம் தானே என தொண்டர்கள் சார்பில் மனம் நொந்து வெந்தும் வேதனைகள் மத்தியிலும் உரிய அதிகாரிகளை இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கின்றோம். (சோ)

-பாதிக்கப்பட்ட தொண்டர்கள்

# சட்ட விரோத வெளிநாட்டுப் பயணத்தை தடுக்க புதிய சட்டம் அறிமுகம்

விமானங்கள்,கப்பல்கள் மூலம் பலர் சட்ட விரோதமான முறையில் வெளிநாடு செல்வதால் அதனைத் தடுக்கும் முகமாக குடியகல்வு, குடிவரவு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

இப்போதுள்ள சட்டத்திற்குப் பதிலாக விசேட சரத்துக்களை உள்ளடக்கிய சட்ட மூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்ற பின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் நீதியமைச்சர் டபிள்யூ.ஜே.வீ செனிவிரட்ன தெரிவித்துள்ளார். புதிய சட்டத்தின் படி சட்ட விரோதமான முறையில் வெளி நாடு செல்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மீளக்குடியேறிய மக்களுக்கு சிறிலங்கா அரசு உறுதியளித்தபடி நிவாரணம் வழங்கவில்லை

## -சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

**சுனாமி கடற்பேரனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து தற்பொழுது மீளக்குடியமரத் தொடங்கியுள்ள யாழ்.வடமராட்சியின் கரையோரப் பிரதேச மக்களுக்கு அரசாங்கம் உறுதியளித்தபடி நிவாரண உதவிகளை வழங்கவில்லையெனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரும் பட்சத்தில் அவர்களுக்கு நிதி உதவியும் உலருணவு நிவாரண உதவிகளும் வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது.

சுனாமியால் சிறுசேதங்களுக்குள்ளாகிய நிலையில் உள்ள வீடுகளைச் சேர்ந்த 450 குடும்பங்கள் இதுவரையில் தமது குடியிருப்புக்களில் குடியேறச் சென்றுள்ள போதும் அரசு அவர்களுக்கு இன்னமும் நிவாரண உதவிகளை வழங்கவில்லை.

இதனால் பெருமளவு உயிர், உடமைகளை இழந்த இம் மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்நிலைமை குறித்து பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தினரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் இம் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (33)

# நடமாடும் சேவையை நடத்த கொடிகாம மக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கும் நடமாடும் சேவையை கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டும் கொடிகாமத்திலேயே நடத்த வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்பொழுது கொடிகாமப் பிரதேசத்திற்கு என்று தனியான பிரதேச செயலகம் இயங்கத் தொடங்கியுள்ள போதும் சாவகச்சேரி பிரதேசச் செயலகத்தில்தான் இப்பதிவு மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் கொடிகாமத்தின் உட்பிரதேசங்களில் உள்ள மோட்டார் வாகனங்களை வைத்திருப்போர் மற்றும் அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என மோட்டார் வாகனங்களை வைத்திருப்போர் வீண் அலைச்சலுடன் நேரம் வீணடிக்கப்படுவதால் இதனால் தங்களுடைய கடமைகளும் பாதிக்கப்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் கடந்த ஆண்டு பிரதேச செயலக அலுவலகத்தில் நடைபெற்றது போல் இந்த ஆண்டும் கொடிகாமம் பிரதேச செயலகத்தில் நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரை மக்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். (28)

# எமது நிவாரணப் பணியைக்குறை கூற ஜே.வி.பிக்கு அருகதை இல்லை

## சு.க.பிரதியமைச்சர் தஸநாயக்க தெரிவிப்பு

தாம் மட்டக்களப்பு நிவாரணப் பணிகளுக்காக சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தமது பணிகள் குறித்து ஜே வி பி விமர்சனம் செய்திருப்பதை பிரதியமைச்சர் தஸநாயக்கா கண்டித்துள்ளார். தமது பணிகள் குறித்து விமர்சனம் செய்ய ஜே.வி.பிக்கு எவ்.வித அருகதையும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். ஜே.வி.பி தம்மை விட்டால் இலங்கையில் புத்திஜீவிகள் இல்லையெனவும் தாமே அரசாங்கத்தை நடத்திச் செல்வதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறது இது பிழையான கருத்தாகும். சிறிலங்கா சுதந்திர கட்சி மேற்கொண்ட நல்லெண்ண முயற்சியின் காரணமாகவே ஜே.வி.பி முன்னிலைக்கு வந்துள்ளது. இதனை மறந்து விட்டு அந்தக் கட்சி பேசக்கூடாது என்றும் பிரதி அமைச்சர் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படும் நிலையில் ஏற்பட்டு வருகின்ற இவ்வாறான முறுகல்கள் அரசாங்க நிர்வாகத்தில் சிக்கல்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது இதே வேளை சிறிலங்கா சுதந்திர கட்சி தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இதுவரை இழைத்த தவறுகளை நிவர்த்திக்கும் வரை அதனுடன் எந்த ஒரு பேச்சு வார்த்தையையும் மேற்கொள்ளப் போவதில்லை என ஜே. வி. பி. தீர்மானித்துள்ளது ஜே.வி.பி யின் அரசியல் குழு இந்த முடிவை எடுத்துள்ளது. அமைச்சர்களின் தொகையை தமக்கு தெரியாமல் அதிகரித்ததை, நோர்வே தரப்பினரை தமக்கு தெரியாமல் சமாதான முயற்சிகளுக்கு அழைத்தமை மற்றும் பல நடவடிக்கைகள் தம்முடனான ஒப்பந்தத்தை மீறுவதாக ஜே. வி. பி. குற்றம் சுமத்தி வருகிறது எனினும் சனாதிபதியின் தரப்பு இதற்கு உரிய பதில்கள் எவற்றையும் அளிக்காமல் இருந்து வருகிறது. (32)

# ஐ.நா. அபிவிருத்தித்திட்ட கிளை முல்லைத்தீவில் அமைக்கப்படும்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டம் முல்லைத்தீவிலும் கிளைக் காரியாலயமொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய கிளையானது சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் பணிகளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேற்கொள்ளுமெனவும் புதிய கிளையொன்றை அமைப்பது தொடர்பாக இதுவரை அரசாங்க அதிகாரிகளுக்கு எவ்வித தகவலும் அறிவிக்கப் படவில்லையெனவும் கூறப்படுகிறது.

இதே வேளை யு.என்.எச்.சி.ஆர், உலக உணவுத்திட்டம், சர்வதேச நாணய நிதியம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# த.பொ.மே நிறுவனத்தின் உதவியுடன் கிணறுகள் துப்புரவு செய்யப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பின் போது கடல் நீர் உட்புகுந்த கிணறுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் வடமராட்சி கிழக்கு மீனவ சங்கங்களின் சமாசம் இணைந்து துப்புரவு செய்து வருகின்றது. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 20 நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் கற்கோவளம் பொற்பதி மற்றும் இன் புருட்டி பகுதிகளில் பொது மக்களது கிணறுகள் சுத்திகரித்து வழங்கப்படுகின்றது. (27)

# சமாதான முயற்சியை ஊக்குவிக்க கோருகிறார் நோர்வே அமைச்சர்

இலங்கையின் சகல அரசியல் கட்சிகளும் அவை பிரநிதித்துவம் செய்யும் மக்களுக்கு சேவையாற்ற இந்த நெருக்கடியான சூழ்நிலையில் முன்வரவேண்டுமெனவும், சுனாமி அனர்த்தமானது அனைவரையும் ஒன்றிணைத்து செயலாற்ற வைத்துள்ளதெனவும் இத்தகைய சந்தர்ப்பத்தில் சமாதான முயற்சிகளும் ஊக்குவிக்கப்பட வேண்டுமெனவும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்டி எப். ஜோன்சன் நேற்றிரவு கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்திருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் சுனாமியால் பாதிக்கப்பட்ட அவர்களது பகுதி மக்களுக்கும் உதவுவதற்கான நிதிவசதிகளை பெற்றுக் கொள்வதற்கான வழிவகையொன்றை கொண்டிருத்தல் வேண்டுமெனவும் தெரிவித்துள்ள அவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான சகல உதவிகளையும் நோர்வே அரசாங்கம் மேற்கொள்ளுமெனவும் தெரிவித்துள்ளார். வன்னிச்சந்திப்பு பற்றி அவர் தெரிவிக்கையில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லையெனவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாகவே பேசப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# பாடசாலைகளை மீளமைக்க "யுனிசெப்" உதவும்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் சேதமடைந்து போயுள்ள யாழ்.குடா நாட்டின் கரையோரப்பிரதேச பாடசாலைகளை மீளமைப்பதற்கான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF) முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் சுனாமி பேரலையின் தாக்கத்தால் சேதமடைந்து போயுள்ள பாடசாலைகளை இயக்குவதற்கு ஏற்ப தற்காலிக வகுப்பறைகளையும் ஏனைய கல்வி உபகரண வசதிகளையும் வழங்க அது நடவடிக்கை எடுத்துள்ளது. (33)

# அம்பாந்தோட்டைஅபி.திட்டங்களால் முஸ்லிம்கள் பெரிதும் பாதிப்பு

## மு.கா.தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியின் பின்னர் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்று வரும் அபிவிருத்தி திட்டங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டித்துள்ளது. அம்பாந்தோட்டை பகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகள் அமைந்துள்ளன. சுனாமியின் பின்னர் இந்த இடங்களில் புதிய நகரங்களை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக அந்த முஸ்லிம் மக்களிடம் எவ்வித கருத்துக்களும் கேட்கப்படவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார். இது அடிப்படை உரிமை மீறல் சம்பவம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக அம்பாந்தோட்டை முஸ்லிம் மக்கள் பிரதமமந்திரி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## -சுனாமியால் பாதிக்கப்பட்ட-

# கிழக்கு மாகாண மக்களுக்கு யாழ்.தே.எ.பேரவை உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டதேசிய எழுச்சிப் பேரவையின் சுனாமி அனர்த்த துயர் துடைப்பு நிதியத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான சுகாதார சேவைகளை வழங்குவதற்கென 5லட்சம் ரூபா வழங்கப் பட்டுள்ளது.

அத்துடன் 12 பொதிகளில் அடைக்கப்பட்ட உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருட்களும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையால் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவையாவும் நேற்று முன்தினம் தரை வழிப்பாதையூடாக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சூ.சிறில் தெரிவித்தார். (33)

## யாழ், தெல்லிப்பழை வைத்தியசாலைகளில் பணிபுரியும்

# உளநலம் சார்ந்த ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரிக்கை

(நல்லூர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தெல்லிப்பளை, மந்திகை மாவட்ட வைத்தியசாலைகளில் கடமை யாற்றும் உளநலம் சார்ந்த அலுவலர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண சபை நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமேன யாழ். மாவட்ட உளநலச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி வைத்திய சாலைகளின் உளநலப்பிரிவில் 20 ஊழியர்கள் கனடா நாட்டின் உதவியுடன் கடந்த நான்கு வருடங்களாக கடமையாற்றி வந்தனர். தற்போது இந் நிதி உதவி கிடைக்காத நிலையில் யூனிசெப், சாந்திகம் உளநலச் சங்கம் ஆகியவற்றின் நிதி உதவிகள் மூலம் இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டுக்கான நிதி உதவிகள் கிடைக்காத நிலையில் இவர்களுடைய சேவையை உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் இழக்க வேண்டிய அபாய நிலை காணப் படுகின்றது.

இந் நிலையில் சங்கத்தலைவர் ந.கனகரத்தினம் தலைமையில தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் இடம் பெற்ற கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதரா திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இவர்களின் தேவையை உணர்ந்து இவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க கோருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.இந் நிகழ்வில் யாழ் மாவட்டமேல திக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி முன்னாள் அரச அதிபர் பத்மநா தன் யாழ் மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள ( அபிவிருத்தி) உதவி ஆணையாளர் கனகசபாபதி, கூட்டுறவுத் திணைக்கள (கணக் காய்வு) உதவி ஆணையாளர் க. சிவலிங்கம் உப்படப பலர் கலந்து கொண்டனர் (41)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## வேலும்மயிலும் சுமத்திராதேவி

1971.09.25

## வேலும்மயிலும் சஜந்தன்

1992.04.01

## வேலும்மயிலும் சனுஜன்

1996.08.28

இறப்பு:- 2004-12-26

26.12.2004 அன்று கடல் அன்னையின் சீற்றத்தினால் இம் மண்ணை விட்டு இறைவனடி சேர்ந்த எனது மனைவி, பிள்ளைகளின் அந்தியேட்டிக்கிரியை 25.01.2005 இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருப்பதனால் அந்நிகழ்வில் பங்கு பற்றி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். அத்துடன் சுனாமி அலையினால் எம்மை விட்டுபிரிந்த அனைத்து உறவுகளின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி - சாந்தி - சாந்தி!

தகவல்:-
கணவன்,தந்தை,
மா.வேலும்மயிலும்
4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

(5099)

# 31ஆம் நினைவு அஞ்சலி



## நாகலிங்கம் -ஆரோக்கியமேரி (மேரி)

கள்ளப்பாடு - முல்லைத்தீவு

அன்னையின் மடியில்
1958-08-23
ஆண்டவன் அடியில்
2004-12-26

அம்மா ! என்றழைத்து பாசமுடன் நீ பெற்றெடுத்த
பிள்ளைகள் நால்வரும் கதறி அழ மேரி....! என்றழுது
உன் பாசமுள்ள கணவன் பதறித்துடிக்க,
மாமி...! என்றுரைத்து உன் மருமகன் ஓலமிட
அப்பம்மா...! என்று உன்னருமைப் பேர்த்தி கதற
மகளே ...! என்றழுது உன்னைப் பெற்றெடுத்த அம்மா கதறித்துடிக்க
அக்கா...! என்று உன்பாசமிகு தங்கைமாரும்,தம்பிமாரும் பதறி அழ
பெரியம்மா, மாமி என்று சிறுவர்களும்,பெரியவர்களும் கதறித்துடிக்க

பாரிலுள்ளோரை பரிதவிக்க விட்டு விட்டு சுனாமிக்கடலலையிலே
எங்கே தான் போனீரோ? நீர் மீண்டும் திரும்பி வருவீரென
நாமெல்லோரும் ஈர விழிகளுடன் காத்திருக்கின்றோம்.
அன்னாரது இறந்த செய்தி கேட்டு உடன் ஓடிவந்தோர், ஆறுதல் வார்த்தை தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றியினை தெரிவிப்பதுடன், இன்று நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
கணவன்: சி.நாகலிங்கம்,
மகன்மாரான: நா.நீதன்,நா.அரவிந்தன்,
நா.மயூரன்,நா.யிரோநிஸ்ரன்.

முகவரி :-
6ஆம் கட்டை,
அளம்பில்,
முல்லைத்தீவு.

(சி-11093)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



## திருமதி ஜெயஸ்ரீ-சிவஜயந்தன்

கச்சேரி அபிவிருத்தி
உத்தியோகத்தர்
முல்லைத்தீவு.

புன்னகை பூத்த முகத்துடன் எனக்கு மாலையிட்டவளே
பூப்போன்ற உள்ளத்தினால் என் உயிர் ஆனவளே
இரண்டு குழந்தைகள் ஆனபோதும் மாறாத அன்புடையவளே
இதயத்தில் என்றும் ஒளி வீசிக்கொண்டிருப்பவளே
நாட்கள் முப்பத்தொன்று சென்றாலும் நானும் பிள்ளைகளும் என்றும் உன் நினைவினில் வாடி நிற்கின்றோம்.

கடந்த 26 .12.2004 சுனமியால் சாவடைந்தபோது நேரடியாக வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு 25.01.2005 எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
கணவன், பிள்ளைகள்.

(5593)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி றஞ்சினி சுந்தரலிங்கம்

| | |
|---|---|
| அன்னை மடியில் 05~07~61 | ஆண்டவன் அடியில் 26~12~2004 |

அறிவுரைகள் கூறி வழிகாட்டிய அன்னையே!
அகல் விளக்காய் ஒளிதந்த எம் குலவிளக்கே!
அன்பு தந்து எமை வளர்த்த தாயே!
அள்ளித் தந்த கடலே உமை அள்ளிச் சென்றதேனோ!

உங்கள் ஆத்மா சாந்தி பெற துயருற்று நிற்கும் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் 24-01-2005 திங்கள் காலை 7.00 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் திப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

தகவல்:~
போராளி நிறையரசி
மாலதி படையணி

முகவரி:~
மா.சுந்தரலிங்கம்
செல்வபுரம்,
முல்லைத்தீவு.

(5580)

### வயதானவர்கள் அரசியலிலிருந்து ஓய்வு பெறுக

படித்த இளைஞர்கள் அரசியலில் பங்கேற்க வேண்டியது அவசியமாகும். அதிக வயதானவர்கள் அவர்களுக்கு வழிவிடும் வகையில் குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி யோசனை கூறியுள்ளார். வயதான அரசியல்வாதிகள் தானாக முன்வந்து ஓய்வு பெற நம்நாட்டில் சட்டம் எதுவும் இல்லை. எனவே சனநாயகத்தின் நலன் கருதி ஒவ்வொரு அரசியல் கட்சியும் இதை நடை முறைப்படுத்த முன்வர வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

## தவறிவிட்டது

குணரட்ணம் நேசகோபாலன் 279 சிவசுந்தரம் வீதி வட்டக்கச்சி யில் உள்ள எனது 5 சிப்பேக், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள, தே.அ.அட்டை, பயண அனுமதி யட்டையுடன் 23-01-2005 அன்று முறிகண்டிக்கும் கோவிந்தன் கடைச்சந்திக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் தகவல் கு.நேச கோபாலன். (5595)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1956 | | 2004 |
| 4 | | 12 |
| 16 | | 26 |



### திருமதி சிவஞானம் மஞ்சுளாதேவி
### குமுழமுனை முள்ளியவளை

சுனாமி எனும் நாமப்பேரலை வந்தது
சுந்தரவல்லியாம்-சேருறவுச் செல்வத்தை-சில கணத்தில்
துளாவிச் சென்றது சோர்ந்தது எம் உள்ளங்கள்-உன்
மழலைகள் வாழ நாம் வழிகள் வகுத்திடுவோம்.

சகோதரன் எஸ்.கே.மகேந்திரன்
கிராம அலுவலர்
ஸ்கந்தபுரம்
மற்றும் கணவர், பிள்ளைகள்,
உடன் பிறப்புக்கள்.

(5588)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### க.சத்திவேல்

ஆதிகோவிலடி வல் வெட்டித்துறையைச் சொந்த முகவரியாகவும், சிவநகர் புதுக்குடியிருப்பை தற்போதைய முகவரியாகவும் கொண்ட க.சத்திவேல் என்பவரும் அவரது மனைவி, பிள்ளைகளும் ஆழிப் பேரலையின் கோரத் தாண்டவத்தால் அகாலச்சாவடைந்தனர். அன்னார்களது பிரிவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் போராளிகள், காவல்துறை அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. முகவரி:
7 ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு (5651)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| அன்னையின் அரவணைப்பில் | | கங்கையின் அரவணைப்பில் |
|---|---|---|
| 1984 | | 2004 |
| 11 | | 12 |
| 18 | | 26 |



சுனாமி அனர்த்தத்தின் போது இறைவனடி சேர்ந்த முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கணிதப் பிரிவு இறுதியாண்டு மாணவன்

### அமரர் செல்வன்
### உதயகுமார்- கோபு

அன்பின் சுடரே அகத்தின் ஒளி விளக்கே எம்மைத் துன்பத்தில் துவள வைத்து எங்கே சென்றாய் ஐயா, என்று வருவீர் ஐயா,எங்கள் மூத்த புதல்வனே பெரிய அண்ணாவே தாளாத அன்பால் எம்மைத் தாங்கி நின்ற புதல்வனே கோபு பாழாய்ப் போன பாதகன் உன் உயிர் கவர்ந்தானே ஐயா ஆழ்கடலில் அகப்பட்ட தோணியாய் எங்கு மறைந்தீரோ ஐயா, உன் அன்பு முகத்தை மீண்டும் காண என்று நாள் வருமோ ஐயா, அன்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய் இருந்து எம்மையெல்லாம் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த எங்கள் குல விளக்கே என்றென்றும் உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,தம்பி, தங்கைமார்
உற்றார், உறவினர்.

(5592)

### தமிழர் புனர்வாழ்வுக் கழக முகாமைத்துவக் கல்லூரியின் AAT கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன

☞ தகைமைகள் ஆகக்குறைந்தது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

☞ விண்ணப்பப்படிவங்களை 05.02.2005 இற்கு முன்னதாக AAT கற்கை நெறி முகாமைத்துவக், கல்லூரி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முதன்மைச் செயலகம், கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். மாதிரி விண்ணப்பப்படிவங்கள் கணினி மையம் (TCC) கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம்.

☞ ஏற்கனவே நடைபெற்று கடல் அனர்த்தத்தால் இடை நிறுத்திவைக்கப்பட்டிருந்த வகுப்புக்கள் 29.01.2005 இல் இருந்து தற்காலிகமாக கணினி பயிற்சி நிலையம், கிளிநொச்சியில் நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

☞ மேலதிக விபரங்களுக்கு முகாமைத்துவக் கல்லூரி, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முதன்மைச் செயலகம், கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- விரிவுரைகள் யாவும் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

நிர்வாகம்
முகாமைத்துவக் கல்லூரி,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

(சி.11094)


f-mAx

சகல விதமான இரண்டாம் தர கணனிகளைப் பெற்றுக்கொள்வதற்கு
வாடகைக்கு — நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

- P ii
- P iii
- P iv
- Multimedia Projector
- Home Studio System
- Digital Camera
- Video Camera

f-mAx




தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

f-mAx குருமன்காட்டுச்சந்தி, குருமன்காடு, வவுனியா.

(சி-11143)



## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**சம்பவதினம் முல்லைப் பகுதியில் நின்ற தமிழீழக் காவல்துறையின் வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவு விசாரணைப் பொறுப்பாளர் சிவனேசன் தான் கண்ட காட்சிகளை விபரிக்கிறார்.**

பகுதி 07



# அந்தப் பிள்ளை அப்பதான் பிறந்திருக்கவேணும் தொப்புள் கொடிகூட அப்படியே இருந்தது

அ.லோகீசன்

சம்பவம் நடைபெற்றுக் கொண்டு இருந்தபொழுது நான் வட்டுவாகல் பகுதியில் உள்ள சீர்திருத்தப்பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

பெரிதாக ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்த வெடிச்சத்தம் கேட்டு ஒரு சில நிமிடங்களில் சனங்கள் எல்லாரும் சேர்ந்து பெரிதாகக் கத்தியவாறு கடல் பக்கம் இருந்து ஓடிவந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் என்ன சம்பவம், ஏன் ஓடி வருகிறீர்கள் என்றுகேட்டோம். அதற்கு அவர்கள் எவரும் பதில் சொல்வதாய் இல்லை. திரும்பவும் அவர்களிடம் என்ன நடந்தது ஏன் இப்படி எல்லோரும் ஓடுகிறீர்கள் என்று கேட்க "ஐஐயோ கடலில இருந்து ஏதோ கறுப்பாய் எங்கண்ட ஊருக்குள்ள பயங்கரவேகமாய் வந்திட்டுது. நாங்கள் திரும்பிப் பாக்கேல்ல இப்ப இஞ்சாலையும் வரும் நீங்களும் ஓடுங்கோ" என்று பயப் பீதியில் சொல்லிக் கொண்டு ஓடினார்கள்.

நான் கடலில் இருந்து கறுப்பாய் வருவதற்கு என்ன இருக்கிறது என்று யோசித்தபடி உள்ளுக்குள் போய்க் கொண்டிருக்க கடல் பெருகி தண்ணி வந்து விட்டது. உடனடியாக என்னுடன் நின்றவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பினேன். அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்க கடல் தண்ணீர் இன்னும் கூடிவிட்டது. நான் சம்பவத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் கானகன் அண்ணாவுக்கு தெரியப்படுத்தினேன்.

தெரியப்படுத்திவிட்டுவெளியில் வந்தபோது சனங்கள் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டு மீனவர் ஓய்வு மண்டபம் இருந்த புட்டியில் ஏறிநின்று கொண்டிருந்தனர். அப்போதைய சூழலில் அந்தப் புட்டியைத்தவிர வேறு எந்தப் பக்கமும் போக ஏலாது. சுத்திவர தண்ணி ஏறிவிட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உறவுகளைத் தேடிக் கதறிக்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் நாங்கள் தண்ணி நின்ற இடங்களைப் பார்த்து சில இடங்களுக்குப் போனோம். அங்கெல்லாம் தப்பி நின்றவர்களை உயரத்தில் இருந்த கோயிலுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம். புட்டியில் நிற்பவர்கள் எல்லோரும் குடும்பங்களாக இல்லை தாய் தந்தையைத் தவற விட்டவர்களும், பிள்ளைகளைத் தவறவிட்டவர்களுமாக அனைவரும் கதறிக் கொண்டிருந்தனர்.

அதுமட்டுமில்லாமல் சிலர் சம்பவத்தை நேரில் பார்த்த அதிர்வில் அதிர்ந்துபோய் இருந்தார்கள். இப்படியே இருக்க மீட்பு அணிகள் பாலத்தின் அந்தக் கரையில் வந்து நின்றன. அவர்களுக்கு நான் இந்தப்பக்கத்து நிலவரத்தை அறிவித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள் நாங்கள் பாலத்தை அந்தக் கரையில் இருந்து சீர்ப்படுத்திக் கொண்டு வருகிறோம். நீங்கள் இக்கரையில் இருந்து சீர் செய்து வாருங்கள் என்றார்கள். உடனடியாக எங்களது உறுப்பினர்களுடன் செயலில் இறங்கினோம். பெரும் சிரமத்தின் மத்தியில் அந்த அணியுடன் இணைந்துவிட்டோம்.

வெளியில் இருந்து வந்த மீட்பு அணி ஒருமாதிரி உள்ளே வந்து விட்டது.. அதனால் உடனடியாகவே மீட்பு வேலைகளில் இறங்கிவிட்டோம். தொகுதி தொகுதியாகப் பாதிக்கப்பட்டவர்களை வெளியே அனுப்பினோம். பின்னர் நான் கிராமங்களுக்குள் மீட்பு வேலைகளுக்காகச் சென்றேன்.

நானும் இன்னுமொரு உறுப்பினரும் கடற்கரையை நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் சந்தைக்குக் கறிவாங்குவதற்காக கொண்டு போகிற பிளாஸ்றிக் பை ஒன்றைக் கொண்டு வந்து "இதைப் பாருங்கோ" என்று தயங்கியவாறு கூறினார். எனக்கு என்னவென்று தெரியாது அவரும் அதைச் சொல்லவில்லை நான் அந்தப் பையைப் திறந்து பார்த்தேன். அதனுள் ஒரு உரப்பை இருந்தது. அதை வெளியால் எடுத்து விரித்துப் பார்த்தேன். பார்த்தவுடன் எனக்குத் தலைசுற்றியது என்ன செய்வது என்றே தெரியவில்லை. அந்தப்பைக்குள் ஒரு பச்சிளம் சிசுவின் உடல் இருந்தது. அதற்கு உயிர் இருக்கிறதா ? இல்லையா? என்பதுதான் இப்போது என்னுள் உள்ள பலமான கேள்வி அந்தச் சிசுவின் உடலை உன்னிப்பாக அவதானித்தேன். அது உயிர் அற்று இருந்தது. அந்தப் பிள்ளை அலை அடித்த அதிர்வில்தான் பிறந்திருக்க வேண்டும். ஏனென்றால் அதன் தொப்புள்கொடி அறுபட்டநிலையில் தொங்கிக் கொண்டிருந்தது.

சிசுவின் கண்கள் மூடியிருந்தது. அதன் பச்சைத் தோல் இரத்தம் தோய்ந்தது போல சிவப்பாக இருந்தது. கடற்கரையில் வீடு இருந்திருக்கவேண்டும் கர்ப்பிணித் தாய் அலையைக் கண்டு அதிர்ந்து போய் ஓடியிருப்பாள். ஆனால் அவளை அலை உருட்டி நசித்திருக்கும் அப்போதுதான் இந்தப் பிள்ளை பிறந்திருக்கும். பிறந்த கணத்தில் இருந்தே அனாதரவாகி விட்டது. உரிமைகோர எவரும் இல்லை வேதனை தாங்க முடியாமல் இருந்தது. அதைக் கொண்டு வந்தவரிடம் எங்கே இருந்தது என்று கேட்டேன். அவர் சொன்னார் "நான் அதால வரும் போது ஒரு சின்னப் பத்தைக்குள் ஏதோ ஒன்று சிவப்பாய் தெரிந்தது. பாதைக்குப் பக்கத்தில எண்டபடியால் நான் அதை வடிவாய் பார்த்தனான். அப்பத்தான் தெரிஞ்சது ஒரு பிள்ளையின்ர பொடி. அதைப் பார்த்ததும் எனக்கு விட்டுட்டு வர மனம் வரேல்ல அந்த உடம்பில இருந்த கஞ்சல்கள் எல்லாத்தையும் தட்டிப் போட்டு எடுத்துக் கொண்டு வந்தனான். நான் எடுக்கேக்குள்ளயே பிள்ளைக்கு உயிர் இல்லை எண்டு தெரியும். எங்கயிருந்து தண்ணி கொண்டு வந்திச்சுது எண்டு தெரியேல்ல" என்று கூறிக் கண்ணீர் வடித்தார் அந்த 35 வயது மதிக்கத் தக்க மனிதர்.

இந்தக் காட்சியைப் பார்த்ததும் எனக்கு இரத்தம் ஓடாமல் நின்று விட்டது போல இருந்தது. ஒருவாறு என்னைத் தேற்றிக் கொண்டு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு அந்த உடலை அனுப்பி விட்டேன். அதை அனுப்பி விட்டு ஒரு 50 மீற்றர் தூரம் போயிருக்க மாட்டோம் ஒரு சின்னப் பெடியனின் சடலம் இருந்தது. அதையும் எடுத்து அனுப்பிவிட்டு தொடர்ந்து செல்வபுரத்திற்குப் போனோம். போய்க் கொண்டிருக்க ஒரு இடிந்த வீட்டுக்குப் பக்கத்தில நிண்டு ஒருவர் "ஐயோ காப்பாற்றுங்கோ வீட்டுச் சுவருக்குள்ள சிக்குப்பட்டு உயிரோட இருக்கினம் ஓடிவாங்கோ எண்டு கத்திக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டுக்குப் போனோம். சுவர்கள் எல்லாம் இடிந்து கோப்பிசம் நிலத்தில் இருந்தது. கடல் தண்ணீர் சுற்றிவர இருந்தது. இந்த நிலையில் தேவன் என்ற உறுப்பினர் கூரையைப் பிரிச்சு வீட்டுக்கு உள்ளே இறங்கினார். இடிபாடுகளுக்குள் இருந்தவர்களை சில பொது மக்களுடன் சேர்ந்து வெளியால் எடுத்தோம். அவர்களில் இருவர் இறந்து போய் விட்டார்கள். ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டு இருந்தார். கட்டடம் இடிந்து அவர்களின் மேல் விழுந்ததால் உடல்கள் நசிந்திருந்தன. இப்படி பல உடல்களை மீட்டோம். அடுத்து செல்வபுரம் கடற்கரைப் பக்கம் போனோம் எவரையும் காணவில்லை. எல்லா இடமும் சுற்றிப் பார்த்தோம் ஒன்றுமே இல்லை. குரல் கொடுத் தோம் ஒரு முதியவர் மாமரத்தின் மேல் ஏறி இருந்தார். அவரைக் கீழே இறங்குங்கள் என்றோம். அவர் அதைக் கேட்ட பாடில்லை. அவருடன் கஷ்ரப்பட்டு ஒருவாறு மாமரத்தில் இருந்து கீழே இறக்கி விட்டோம் அவர் என்ன செய்வது என்று தெரியாமல நின்றார்.

அந்தளவுக்கு சம்பவத்தைப் பார்த்த அதிர்ச்சி அவரை ஆழமாகப் பாதித்திருக்க வேண்டும். அந்தளவுக்கு அவரின் பாதிப்பு இருந்தது. அப்படியே திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது ஒரு பற்றைக்குள் இருந்து ஒருவரது கால்தொடை மட்டும் தெரிந்தது. தொடைக்குக் கீழ் கால் இல்லை. எப்படிப் போயிருக்கும் என்று யோசித்தபடி அவரை மீட்பதற்காக அவரின் அருகில் போனோம். அப்போதுதான் தெரிந்தது அவருக்கு ஏக்கனவே கால் இல்லை என்ற விடயம். அவரின் சடலத்தையும் எடுத்து அனைத்தையும் ஒன்றாய் சேர்த்து வாகனத்தில் ஏற்றி புதுக்குடியிருப்புக்கு அனுப்பிவிட்டோம்.

வட்டுவாகலில் உள்ள எங்கள் சீர் திருத்தப் பணிமனைக்கு வந்து அந்தத்தார் வீதியால் கொஞ்சத் தூரம் நடந்து போய்க் கொண்டிருந்தோம் அப்போது வீதிக்கும் தண்ணீருக்கும் நடுவில் ஒரு உடல் கரை ஒதுங்கியது போல இருந்தது. அதன் பின்னால் ஒருவர் ஆடைகள் எதுவும் இல்லாமல் தண்ணீருக்குள்ளால் நடந்து வந்தார். இவர்கள் வட்டுவாகல் ஆத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அலை அடிச்சுக் கொண்டு போயிருக்க வேணும். அப்படியானால் வீதிக்கும் தண்ணீருக்கும் இடையில் இருந்த உடல் என்ன அது எப்படி வந்தது என்பதை அடுத்த பகுதியில் தருகிறோம்.



(தொடரும் )

# 31ஆம் நாள் நீங்காத நினைவுகள்



**செல்வி. யோசேப் மேரிறொக்சி**

2005 வணிகப்பிரிவு மாணவி

முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

பிறப்பு 09-02-1987 இறப்பு 26-12-2004

அன்பான கண்மணியே
பண்பான பொன்மகளே
ஏக புத்திரியாய்
எழுவரில் ஒருத்தியாய்
எம்முடன் இருந்தவளே
கொடிய சுனாமி வந்ததுவே
கொண்டு போனதே எம்மைவிட்டு
தவிப்போ சொல்லிடங்காது
துடிக்கிறோம் உன் உறவுகள்
ஓர் மாதம் காற்றாய்ப் பறந்ததுவே
எத்தனை மாதம் பறந்தாலும்
உன் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு அகலாது
உன் ஆன்மா சாந்தியடைய
என்றும் நாம் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

த.மு: இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

நி.மு:- கோவில் குடியிருப்பு
முல்லைத்தீவு.

(சி-11145)

# 31ஆம் நாள் கண்ணீர் பூக்கள்



பிறப்பு 1942 - 08 - 14

இறப்பு 2004 - 12 - 26

## இராயப்பு – யாக்கோப்பு

கட்டைக்காடு - முள்ளியான்

சுனாமி பேரலையின் போது
எங்கள் அன்பான அப்பாவே
மாதமோ ஒன்றுதான் ஆனதப்பா – எங்கள்
மனங்களோ வேதனையில் தவிக்குதப்பா.
நல்ல செய்தி கேட்பதற்கோ
ஆவலோடு காத்திருந்தோம் – ஆனால்
கண்ணீரோ கதை சொன்னதப்பா.

26-12-2004 அன்று கடல் கொந்தளிப்பால் இறந்து போன அனைத்து உள்ளங்களையும் 25-01-2005 இந் நாளில் நினைவு கூர்ந்து இவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தணிகை மாறன் குடும்பம்.)

**இவரின் பிரிவால் வாடும்**
**மனைவி, பிள்ளைகள்.**
**மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

குடும்பத்தினர் (பளை)
தருமபுரம்
6ஆம் யூனிற்

(5591)

# 31ம் நாள் நெஞ்சைவிட்டகலாத நினைவஞ்சலி

ஆழ்கடல் அலையில்

2004 • 12 • 26



அல்பிரட் அன்ரனி ஜீவாஞ்சலி(லதா)
அன்னையின் மடியில்
1977.03.07



அல்பிரட் அன்ரனி அனோஜன்
அன்னையின் மடியில்
2001.12.27

சுனாமியின் கோரப்பசிக்கு இரையாகிப் போன எமது பணிப்பாளரின் மனைவி மகன் ஆகியோரது 31ம் நாள் நினைவுகளில் இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்பதுடன் இவர்களின் பிரிவால் துயருறும் குடும்ப உறுப்பினருடனும் எமது கவலையினைப் பகிர்ந்து கொள்கிறோம்.

செயற்குழு உறுப்பினர்கள், பணியாளர்கள்
வெண்புறா நிறுவனம்

(சி-11090)

# 31 ஆம் நாள் நினைவும் கண்ணீர் அஞ்சலியும்

26.12.2005 அன்று ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் உறவுகளையும், உடமைகளையும் இழந்து தவிக்கும் அனைத்து மக்களுக்கும் எமது அன்பையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக முல்லைத்தீவில் தமது உறவுகளை இழந்து தவிக்கும் எமது நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அதேவேளை சாவடைந்த அனைவரது ஆன்மாக்களும் சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கா.விக்னேஸ்வரன்
யாழ்.சுவை வெதுப்பகம்
கடற்கரைவீதி,முல்லைத்தீவு

கா.பாஸ்கரன்
நிவேதினி வெதுப்பகம்
கொக்குவில்
யாழ்ப்பாணம்.

(5598)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
01
07
1976



உதிர்வு
26
12
2004

## சூசைப்பிள்ளை நேசநாயகம்
## (அம்மா எரிபொருள் வாணிப உரிமையாளர்)

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் மானிலத்தில்
புனிதமாய் வாழ்ந்து இறைவன் கழடைந்தீர்
இனிய உமது முகத்தை இனி எப்போது காண்போம்?
கனிவான பேச்சு மட்டும் காதுகளில் கேட்கிறதே
உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை
பிரார்த்திக்கின்றோம்

25-01-2005 செவ்வாய்க்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
தாய் (சூ.றீற்ரம்மா)

உமது பிரிவால்
வாடும் அன்புச் சகோதரம்
தவம், அன்ரன், அண்ணிமார்
சத்தி, மதுரா, அம்மா

(5656)

# 31 ஆம் நாள் அழியா நினைவலைகள்

கடந்த 26-12-2004 அன்று உலகை உலுக்கிய சுனாமி கடல் அனர்த்தத்தினால் பலியான எமது முல்லைப்பிரதேச வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் எமது வர்த்தக பணியாளர்கள் அனைவரினதும் செய்தி கேட்டு வர்த்தக சாங்கத்தினராகிய நாம் அனைவரும் ஆறாத்துயரில் ஆழ்ந்து நிற்கின்றோம். வர்த்தக சங்கத்தின் வளர்ச்சிக்காக இவர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக அரும்பாடுபட்டு தங்களின் ஒத்துழைப்பை வழங்கியவர்கள். இவர்களின் இழப்பு எமது வர்த்தக சமூகத்துக்கு பேரிழப்பாக இருக்கின்றது. இவர்களின் இழப்பினை தாங்க முடியாமல் தவித்து நிற்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து நிற்கின்றோம். மேலும் இவ்வனர்த்தத்தில் பலியான போராளிகள், நாட்டுப்பற்றாளர்கள், பொது மக்கள் அனைவருக்கும் எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்கி 31 ஆம் நாள் நினைவலைகளில் திளைத்து நிற்கின்றோம்.

வர்த்தக சங்கத்தினர்,
முல்லைப் பிரதேசம்,
முல்லைத்தீவு.

(5653)

# தற்காலிக கூடாரங்களுள் வெள்ளம் இடம் பெயர்ந்த மக்கள் அவலம்

கிழக்கில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினால் கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்களுக்குள் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் இங்குள்ள மக்கள் இத் தற்காலிக கூடாரங்களை விட்டு வேறு பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிழக்கில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வீடுகளிலும், வீதிகளிலும், நலன்புரி நிலையங்களிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இம்மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்கள் உறுதியானதாக இல்லை. இதனால் குழந்தைகள், சிறுவர்கள், பெரியோர்கள், நோயாளிகள் பாதிக்கப்பட்டு வருவதோடு பல்வேறு சொல்லொணாத் துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மார்க்கண்டு தவமணிதேவி
1946-04-15

முருகேசு மார்க்கண்டு
1937-08-23

26-12-2004 அன்று கடல் அன்னையின் சீற்றத்தினால் எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எனது அம்மா, அப்பா, தங்கைமார் தி.மங்கையற்கரசி, ம.பாக்கியம், பி.விஜயகுமாரி, மருமக்கள் த.நிசாந்தினி, தி.மயூரா ஆகியோரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

தகவல்:-
மகன்,அண்ணன்,மாமா,
மா.வேலும்மயிலும்.

(5655)

# 31ஆம் நாள் நினைவலைகள்



திருமதி இராஜரட்ணம் இராசம்மா

கடலன்னையின் மடியில்
26. 12. 2004



செல்வி செல்வமலர் இராஜரட்ணம்

அன்னையின் மடியில்
10
03
1935

கருவில் எம்மைச் சுமந்து
கண்மணியாய் எமைக் காத்து-உன்
எண்ணமெல்லாம் எமை நினைத்து -எம்மை
வண்ணமுற வாழ வைத்த தாயே!
ஒரு கொடியதன் மலர்களாக
உருவெடுத்து மலர்ந்த எம்மில்
ஒரு மலராய் மணம் வீசிய
உடன் பிறப்பே!
வளரும் பிறையாய் எமை வளர்த்து
உளமார உறவாடிய எம்முறவே!
கண்ணிமைக்கும் நேரத்துள் கடலலையில்
காணாமற் போனதேன் எமை விட்டு
கரையிருந்து உருகியழுகிறோம்
கரைக்கு நீர் வரும் நாளை எதிர்பார்த்து.....

அன்னையின் மடியில்
18
06
1956

இந்நாளில் கடலலையில் கரைந்து போன அனைத்து மக்களையும் நினைவு கூர்ந்து எம் உறவுகளின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
10ஆம் வட்டாரம், தாளையடி.

தகவல்:-
பிள்ளைகளும், சகோதரர்களும்
தவம் (வன்னி)
பஞ்சலிங்கம் (லண்டன்)
ரவீந்திரன் (டென்மார்க்)
பாலச்சந்திரன் (கனடா)

(5589)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# நம்பிக்கை கனவுகளுடன்...

நூற்றாண்டு போட்டி என சிறப்புப் பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இதில் முன்னணி வீரர்கள் தாம் இழந்த பெருமையை மீண்டும் பெறக் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்று வருகின்றனர்.

குறிப்பாக, அந்ரே அகாசி, செரினா வில்லியம்ஸ், லெயிட்டன் ஹெவிட், அன்ரு ரொடிக், மரட் சபின் ஆகியோர் வெற்றிக் கனவுடன் இருக்க உலகின் முன்னணி வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெரடர் அமைதியாக முன்னேறிக் கொண்டுள்ளார்.

இதற்கிடையில் உலகின் மூன்றாம் நிலை வீரரும் மண்ணின் மைந்தனுமான லெயிட்டன் ஹெவிட் சம்பியன் பட்டத்தை கைப்பற்ற வேண்டும் என்ற உறுதியில் இருக்கிறார்.

அதேபோல் அவுஸ்திரேலிய மக்களும் இவர் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு அவரும் சிறப்பாக ஆடி வருகின்றார்.

அடிலெய்ட் நகரில் பிறந்த ஹெவிட் பாடசாலைக் காலத்தில் ஆர்வம் காட்டியது கால்பந்தில் தான். தனது 13 வயது வரை கால்பந்தை உதைத்துக் கொண்டிருந்த இவரை டென்னிஸ் விளையாட்டிற்கு ஈர்த்தது அமெரிக்காவின் அந்ரே அகாசியின் ஆட்டம்.

இளவயதில் அகாசியின் ஹேர்ஸ்டைல், துடிப்பான ஆட்டம் ஆகிய இரண்டுமே ஹெவிட் டென்னிசில் களமிறங்கக் காரணமாக இருந்தது.

1996இல் இவர் அவுஸ்திரேலியாவின் யூனியர் நம்பர் வன் வீரராகத் திகழ்ந்தார். பின்னர் 1997இல் அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் விளையாடத் தகுதி பெற்றார். அப்போது இத்தொடரில் தகுதி பெறும் மிக இள வீரர் என்ற பெருமையைப் பெற்றார். அனுபவம் இல்லாததால் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்தார். மனம் தளராத இவர் தொடர்ந்து முயற்சி செய்ய 2001 வெற்றிகரமான ஆண்டாக அமைந்தது.

ஏ.டி.பி. தரவரிசை பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்ததுடன் இதிலும் நம்பர் வன் இடத்தைப் பிடித்த மிக இளம் வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

அப்போது ஹெவிட்டுக்கு வயது 20. அமெரிக்கன் ஓபன் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இவர் டென்னிஸ் ஜாம்பவான் அமெரிக்காவின் பீட் சாம் பிராசை வீழ்த்தினார்.

இதன் மூலம் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார். அதிலிருந்து மிக சிறப்பாக விளையாடிவரும் ஹெவிட், இம்முறை சம்பியன் பட்டம் வெல்ல வேண்டும் என்ற உறுதியுடன் உள்ளார் இதனை அடைய கடக்க வேண்டிய தடைகள் பலமானது. தாண்டுவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.



# கல்விக்கு விளையாட்டுத் தடையல்ல சாதிக்கத் துடிக்கும் வீரன்

**முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தேசிய மட்டத்தில் தடகளப் போட்டியில் பங்கு பற்றி ஒரு வெண்கலப் பதக்கத்தையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் முறையே 800 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் ஓட்டங்களுக்காகப் பெற்று தந்து பெருமை சேர்த்த செல்வன் 'சகாயரட்ணராஜா நிறஞ்சன் அவர்களுடனான செவ்வி.**

இலங்கையின் உள்நாட்டு போரினால் யாழ்ப்பாணத்திலிருந்து தனது பாலன் பிராயத்திலேயே குடும்பத்துடன் பல இன்னல்கள் மத்தியில் முல்லைத்தீவில் இடம்பெயர்ந்து தனது ஆரம்பக் கல்வியை சக்கோட்டை றோ. க.த.க. பாடசாலை மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கற்று அதன் பின்பு தொடர்ந்து தனது கல்வியை மு. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கற்று வருகிறார். இவர் தற்போது 2005 க.பொ.த. உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்று வருகிறார்.

எம் மண்ணின் போர் சூழல் நிறஞ்சன் போன்ற பல திறமையுடைய எமது விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டப் போட்டிகள், ஏன் மாகாண மட்டப் போட்டிகளுக்குக்கூட முகம் கொடுக்க முடியாத ஓர் இறுக்கமான இருண்ட சூழலுக்கு உட்படுத்தியிருந்தது. தமிழ் இனத்தின் அழியாத சொத்தாக 'திறமை, நம்பிக்கை, துணிவு' என்றுமே உள்ளது என்பதை உலகே அறியும்.

அந்த வகையில் 2002ஆம் ஆண்டு அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் இவ்வாறான போட்டிகளில் பங்குபற்ற எமது மாவட்டத்திலிருந்தும் வீரர்கள் சென்றனர். 'Winers are not born, They are made' என்ற ஆங்கில முதுமொழியின் முழுவடிவத்தையும் தந்த செல்வன் சகாயரட்ணராஜா நிறஞ்சனின் கடும் பயிற்சியும், தளராத நம்பிக்கையும் எமது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தேசிய மட்டத்தில் வெண்கலம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுத் தந்து 2004ஆம் ஆண்டு தடகளப் போட்டியில் பெருமை சேர்த்துள்ளார்.

கேள்வி : தடகளத் துறையில் எவ்வாறு உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது?

பதில் : எனக்கு சிறு வயதிலிருந்தே இயல்பாக இத்துறையில் ஆர்வம் இருந்தது. இதனை அக்காலம் முதல் எனது பெற்றோர் இன்றுவரை விடாது ஊக்கம் தந்த வண்ணமுள்ளனர். சிறுவயதிலேயே யாழ்ப் பாண இடப்பெயர்வால் எனது தடகள வாழ்வு பாடசாலை மட்டத்துடனேயே முடிவு கண்டது. பின்பு வள்ளிபுனம் கிராமத்திலிருந்து க.பொ.த. சாதாரணதரக் கல்வியைக் கற்கும் நோக்கிலும், எனது சகோதரர்களின் கல்வியையும் நோக்கமாகக் கொண்டு எமது குடும்பம் புதுக்குடியிருப்பு கிராமத்தில் வசிக்கத் தொடங் கிய பிற்பாடு, நான் மு/ புதுக்குடியிருப்பு மகாவித்தி யாலயத்தில் கல்வியைத் தொடர்ந்தேன்.

இக்காலப் பகுதியிலேயே முல்லை மாவட்ட பயிற்சி நிலைய விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ந. முகுந்தன் அவர்களை சந்திக்கும் நிலை ஏற்பட்டு அன்றிலிருந்து அவர் தொடர்ந்து உரிய முறையில் பயிற்றுவித்தார். இதனால் இத்தடகளத்தில் அதீத ஆர்வம் என்னில் தொற்றிக் கொண்டது. இதைவிட வானொலி, பத்திரிகையில் வரும் விளையாட்டுச் செய்திகளை ஆர்வத்துடன் உள்வாங்குவதும் எனது இத்தடகளத்துறையின் ஆர்வத்திற்கு அடிப்படையாக அமைந்தது எனக் கூறலாம்.

கேள்வி : அண்மையில் 2004 தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி ஒரு வெண்கலப் பதக்கத்தையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளீர்கள். இது பற்றி சற்றுக் கூறுங்களே?

பதில் : நான் இத்தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இதற்கு முன் இரு தடவைகள் (2004 முன்பு) சென்று இறுதிப் போட்டி வரை முகம் கொடுத்தும் என்னால் வெற்றியை எனதாக்க முடியவில்லை. எனது பயிற்சியாளர் ந. முகுந்தனின் இடைவிடாத பயிற்சியும் எனது தளராத நம்பிக்கையும் 2004இல் தேசிய மட்ட தடகளப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தை 49:45 செக்கன் ஓடி முடித்து இரண்டாவது இடத்தையும் நிறச்சாதனை விருதையும், 800 மீற்றரை 1:58:11 செக்கனில் ஓடி முடித்து மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற் றேன். இதைவிட 2004ஆம் ஆண்டு மாகாண மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டேன்.

கேள்வி : உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பற்றிக் கூற முடியுமா?

பதில் : எனது வளர்ச்சியில் பெற்றோருக்கு அடுத்த படியாக பயிற்சியாளர் திரு. முகுந்தன் ஆரம்பத்தில் என்னை சரியாக இனம் கண்டு சரியான நிகழ்ச்சியை தெரிவு செய்து என்னை உடல், உள ரீதியாக தயார்ப்படுத்தி பயிற்றுவித்து இத்தகைய நிலைக்கு கொண்டுவந்தார்.

அடுத்து எமது பிரதேசத்திலுள்ள Super Rank விளையாட்டு கழகத் தலைவர் திரு. ஜான் அவர்கள் தனது சொந்த நிதி யிலிருந்து எனது தடகள விளையாட்டுக்குரிய அடிப்படை வசதிகளைச் செய்து தந்ததை நான் மறக்க முடியாது. இவர் நான் இனம் காணப்படாத சாதாரண வீரனாக இருந்தபோதே எனக்கு பல உதவிகள் செய்தார். தொடர்ந்தும் எனது Sponsor ஆக இருந்து என் வளர்ச்சிக்கு உதவுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

இதைவிட எனது பாடசாலை அதிபர் திரு. P.K. சிவலிங்கம் அவர்கள் என்னை பல வழிகளிலும் உற்சாகப்படுத்தியுள்ளார்.

கேள்வி : இத்தடகள விளையாட்டுத்துறை உங்களது கல்வியை எப்போதாவது பாதித்துள்ளதா?

பதில் : எனது தடகள விளையாட்டு என்னுடைய கல்விக்கு எப்போதும் இடையூறாக இருக்கவில்லை. மாறாக கல்விக்கு ஆரோக்கியமான உத்வேகத்தையே தந்துகொண்டிருக்கிறது. நான் தடகள விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டே க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 A, 3B, C களையும் பெறுபேறாகப் பெற்றுள்ளேன். தற்போது 2005 க.பொ.த. உயர்தரம் கணிதப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டே எனது தடகளப் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறேன்.

கேள்வி : நீங்கள் உங்களது தடகள விளையாட்டுத் துறையில் ஆர்வம் அல்லது பயிற்சியின்போது முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி கூற முடியுமா?

பதில் : எங்களது முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்த மட்டில் சீரான முறையான உடற்பயிற்சிக் கூடமோ, விளையாட்டு மைதானமோ இல்லை. உரிய உபகரணங்கள் இல்லை. நாங்கள் பாவிக்கும் தற்போதைய விளையாட்டு மைதானத்தில் மாரிகாலத்தில் பயிற்சி செய்ய முடியாது. கோடையில் அது வெள்ளம் வழிந்தோடி பள்ளம் திட்டியாக காட்சியளிக்கும். இதனால் நாம் பாவிக்கும் ஓட்ட சப்பாத்து Spike ஆனது விரைவாகப் பழுதடைகிறது.

இதனால், மேலதிக பயிற்சி (Advance Training) செய்யும்போது முழுமை அடைவது கடினம் என்றே சொல்லலாம். இதைவிட எமது பிரதேசத்தில் ஏனைய பிரதேசங்களில் இருப்பதுபோல் Sponcer செய்பவர்கள் இல்லை. இவ்வாறான வசதிகள் வெளிமாவட்டங்களில் உண்டு. எனவே, அவ்வாறான வசதிகள் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் நாம் தேசிய மட்டத்துடன் நின்று விடாது அதற்கு அப்பாலும் செல்லமுடியும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

கேள்வி : நீங்கள் இத்தடகளத்துறையில் வெற்றியீட்ட பயன்படுத்தும் உத்திகள் பற்றிக்கூறமுடியுமா?

பதில் : "ஒரு வினாடி மௌனம். அதன் பின் மெல்லிய சிரிப்புடன்" என்னைப் பொறுத்த வரையில் இத்தடகளத்துறை நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்து அறிந்ததைவிட நான் ஒவ்வொரு போட்டிகளில் நேரடியாகப் பெறும் அனுபவங்களே எமக்கு கிடைக் கும் விபரிக்க முடியாத நுட் பமாகும். எனவே, ஒவ்வொரு தடகள வீரனும் கள மிறங்கி நேரடியாகப்பட்டுணரும் அனுபவங் களே அவ னுக்குரிய சிறந்த நுட்பங்கள், உத்திகளாக அமைகிறது என்பதே



எனது கருத் தாகும்.

கேள்வி : உங்களது எதிர்கால இலக்கு யாது?

பதில் : 2005ஆம்ஆண்டு தேசிய மட்டப் போட்டியில் சாதனை ஒன்றை ஏற்படுத்துவதுடன், தொடர்ந்து தேசிய மட்டத்துக்கு அப்பால் உள்ள உயர் போட்டிகளுக்கும் முகம் கொடுத்து வெற்றியீட்டுவது ஆகும். இத்தடகளத்துறையானது தனிநபர் நிகழ்வு. இதன் மூலமாக இலகுவில் கடும் பயிற்சியின் ஊடாக சாதனை என்ற இலக்கை எட்டுவது சுலபம்.

கேள்வி : இறுதியாக, இத்துறையில் ஈடுபடவுள்ள ஆர்வம் மிக்க வீரர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?

பதில் : ஒரு தடகள வீரனுக்கு தன்நம்பிக்கை, கடும் பயிற்சி, நிறைந்த செயல் ஊக்கம் இருந்தால் அவனுக்கு நிறைய அனுபவங்கள் கிடைக்கும். இவ்அனுபவங்கள் நல்லாசானாக அமையும் நான் ஏற்கனவே கூறிய நுட்பங்கள், உத்திகளை தானே தனக்கு ஏற்ற வகையில் பெற்றுக் கொள்ளமுடியும்

இதைவிட வீட்டார், நல்ல பயிற்சியாளரின் துணை, அந்த வீரர் வாழும் சமூகத்தின் ஊக்குவிக்கும் மனப்பான்மையும் கிடைத்தால் ஒரு தடகள வீரனுக்கு முழுமையான வெற்றிக்கு எந்தத் தடையும் இருக்கமாட்டாது. குறிப்பாக, எமது பிரதேசத்தில் கல்விச் சமூகத்திடமிருந்து வரவேற்புக் கிடைக்கவில்லை. அதைவிட விளையாட்டுக்கென உள்ள அமைப்புக்கள் கூட இது தொடர்பாக எதுவித ஊக்குவிப்பையோ, வரவேற்பையோ தரவில்லை என்பது எதற்கு எனத் தெரியவில்லை. இது எனக்கு மிகவும் மனவருத்தத்தையே த்ருகிறது. □

செவ்வி கண்டவர்

**அருணா தவராஜா**

# 3 ஆம் வருட பாச நினைவு



அம்மா! அம்மா!! என்று அனுதினமும் அழைத்து நிற்கின்றோம் அருகிலிருந்து அணைத்து வழிகாட்டினீர்கள் தேச விடுதலையும், இறைபணியும் ஒன்றாகத் தேடியே இறுதிவரை உழைத்தீர்கள், எங்கள் எல்லோரையும் வாழ வைத்து இறைவனின் வானத்தில் வாழ்கின்றீர்கள்.

செவ்வாய்க்கிழமை 25. 01. 2005 இன்று வவுனிக்குளம் கல்வாரிப்பூங்காவில் பகல் 11.00 மணிக்கு நன்றித்திருப்பலியும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய உணவு விருந்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மாவை பாசமுடன் நினைவுகூரும்.
திருமதி. ஜெகசோதி வரதராசா,
திருமதி. ஞானசோதி புஸ்பராசா,
செல்வி. மேரி இரத்தினசோதி,
திரு. அரியரத்தினம்,
திரு.ஜீவரத்தினம்,
திருமதி. உதயசோதி ஜேம்ஸ்,
அருட்திரு. ம.பெ.ஞானரத்தினம்,
அருட்திரு. ம.எ.கருணரத்தினம்.

(1121/9)

மண்ணில் 29 05 1922

விண்ணில் 25 01 2002

## திருமதி மரியாம்பிள்ளை மேரி இராசமணி

# நினைவில் மறையா 31ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு:- 17.06.1996

**ரவிச்சந்திரன்**
**கபில்நாத்**



பிறப்பு:- 08.07.1970

**ரவிச்சந்திரன்**
**சோமேஸ்வரி**



பிறப்பு:- 11.11.2000

**ரவிச்சந்திரன்**
**சோபிகன்**

இறைவனின் கரத்தில்:- 26.12.2004

பூவுக்குள் மொட்டாக பூவுலகில் அவதரித்து
பெருமையுடன் வாழ்ந்த எங்கள் வாழ்வுடன்
பெருந்தீங்கு விளைவித்த இயற்கையே!
உன் சீற்றத்தால் உறவுகள் பிரிந்தனர்
தவிக்கின்றோம்!

26.12.2004 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால் சாவடைந்த அனைத்து ஆத்மாக் களும் சாந்தியடைய பிரார்த்திப்பதோடு என் மனைவி, பிள்ளைகளின் பிரிவுச் செய்தி அறிந்து, எமது துயரத் தில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது கண்ணீரோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

பிரிவால் துயருறும்.
பொ.ரவிச்சந்திரன்(சிவா),
(குடும்பத்தினர்)
அம்பலவன் பொக்கணை,
முல்லைத்தீவு.

(5657)

சிலாவத்தை,
முல்லைத்தீவு.

# 31ஆம் நாள் நினைவாக...

உதிர்வு
26-12-2004



அன்ரன் யூதாகுருட்ஸ்
**மேரி அஜந்தா**
மலர்வு 25-08-1998



அன்ரன் யூதாகுருட்ஸ்
**நிந்துஷா (நிந்து)**
மலர்வு 14-01-2004

கடவுளிடம் வரம் கேட்டு
களிப்புடனே உமைப் பெற்றோம்
கதை சொல்லி உறங்க வைத்து
கண் விழித்து உமை வளர்த்தோம்
கடல் பெருகி ஊர் நிரப்ப
கரம் இறுக்கி நீர் பிடிக்க
காத்திடுவோம் என எண்ணி
கடும் முயற்சி நாம் புரிய
கடல் திரும்பும் அலை இழுப்பில்
கைநழுவி நீர் போக
கதறினோமே...... பதறினோமே.........
கண்மணிகள் எங்கு சென்றீர்?
உயிரிழந்த உமை எண்ணி
ஊமையாய் அழுகின்றோம்
உயிரிருந்தும் உடலிருந்தும்
உண்மையாய் நாம் சடலங்களே!

என்றும் உம் எண்ணங்களோடு வாழும்:
பாசமிகு பெற்றோர்
மற்றும் சுவர்ணன்சித்தப்பா,
லதாசித்தி, சதுர்ஷன்தம்பி

வடமராட்சி கிழக்கு,
வெற்றிலைக்கேணி.

(5661)




# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10.07.1935
**திருமதி**
**கணபதிப்பிள்ளை**
**வள்ளிப்பிள்ளை**



மலர்வு 18.06.1976
**திருமதி**
**ஜெயசுதன் சிவமதி**
(மேன்முறையீட்டு
சட்டவாளர்)
(கிளிநொச்சி)



மலர்வு 18.03.1935
**திருமதி**
**செல்லக்கண்டு**
**தங்கமணி**

*உதிர்வு 26 . 12 . 2004*
(உடுத்துறை, தாளையடி)

கடலன்னை கொண்ட சீற்றத்தால்
காலன் உங்களை
அணைத்துக் கொண்டான்
நீங்கள் பிரிந்து சென்று
மாதமொன்று ஆனதுவோ
உம் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

உடுத்துறை,
தாளையடி.

(5604)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவில்

கர்த்தருடைய பரிசுத்தவான்களின்
மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது (சங்:116:15)



மறைவு அஞ்சலி ஆராதனை
**திரு. அருளப்பு ஞானேந்திரம்**
முல்லைத்தீவு

தாயின் மடியில் 29.12.1964 — கர்த்தரின் கரத்தில் 26.12.2004

மகள்
**ஞானேந்திரம் ஆன்பிரியந்தி**

தாயின் மடியில் 18.08.2000 — கர்த்தரின் கரத்தில் 26.12.2004

மகள்
**ஞானேந்திரம் ஆன் தமயந்தி**

தாயின் மடியில் 15.11.2001 — கர்த்தரின் கரத்தில் 26.12.2004

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் வெளி (14:13) இவர்களின் நினைவாக 29 ஆம் திகதி 12.00 மணியளவில் நடைபெறும் ஜெபக் கூட்டத்திலும், விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு சபையோர் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அறிவிப்பு
**திருமதி:- ஞானேந்திரம்-சிவகுமாரி (நாகேஸ்),**
கோம்பாவில் -புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(5660)

# 31 ஆம் நாள் நினைவுகளுடன்...

அன்னை மடியில் 02 02 1981



கடலன்னை மடியில் 26 12 2004

**செல்வி:- குமாரவேல்-விஜயமலர் (தீபா)**
**கள்ளப்பாடு முல்லைத்தீவு**

பள்ளிப் பருவமதில்
பாடம் பயில்கையிலே
பாங்குடனே பழகியவளே!
உன் பிரிவால் நட்புகள் -நாம்
கலங்குகின்றோம்.
அலை வந்து தாலாட்டும் உன தூரில்
பேரலை வந்து உனக்கு உலையானதோ
கடலன்னை ஆர்ப்பரிக்கையில்
உனதன்னையுடன் காலனிடம் சென்றாயோ
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
மீண்டிடும் உன் நினைவு எங்களுக்கு

*இந்த நாளில் சுனாமி அனர்த்தத்தினால் சாவடைந்த அனைத்து உறவுகளையும் நினைவு கூருகின்றோம்.*

(5659)

*உன் நினைவுகளுடன்*
*மாணவர்கள்*
*2000 வர்த்தகப் பிரிவு*

மனதை விட்டுப் பிரிந்த மனதில் விழுந்த பூவின்

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

## மகாலிங்கம் - புருஷோத்தமன்

பிறப்பு - 27-03-1994
இறப்பு - 26-12-2004



பூவாக மலர்ந்த போது
எமக்கென்று நாம் நினைத்து
உன் வரவில் இன்புற்று
துன்பமெலாம் நாம் மறந்தோம்
நாடகமா? பைந்தமிழா?
நல் விளையாட்டா? நாலும் பயின்று
நீ! புகழ் எமக்கு சேர்க்க வந்தாய்
ஏட்டுக் கல்வியினில்
ஏற்றமிகு உயர்வு கண்டாய்
உன் நாளைய வரவுக்காய்
உன் அன்னை ! உன் தந்தை
உடன் பிறந்தார்! உற்றவர் யாவரும்
உள்ளங்கள் திறந்திருக்க
பொங்கிவந்த கடலதற்கு
பசியெடுத்து புருஷோத்தமா ! நீ
இரையாகிப் போனாயோ !!

இடம்:- கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

தகவல்
அப்பா, அம்மா,
அண்ணா,
அக்காமார்,
மாமாக்கள்.

5654

# நீங்காத நினைவலைகள்

கடந்த 26.12.2004 அன்று ஆழிப்பேரலையின் அலைகளிலே சிக்கி சாவடைந்த எமது



திரு. பூ. சண்முகஆனந்தன்
(கணக்காளர் மாகாணசபை)



திருமதி. ஜெயசிறி
சிவஜெயந்தன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)



திருமதி. நிர்மலாதேவி
யோகரட்ணம்
(எழுதுனர்)



திருமதி. வள்ளிகாந்தா
புலேந்திரராசா
(குட்டெழுத்தாளர்)

ஆழிப்பேரலை அலைகள்
எம் தோழமையின் சிறகுகளை
அடித்து சென்றதுவோ!
பாடித்திரிந்த எம் பறவைகளை
எம்மை நித்தம் தேடவிட்டு அலைகள்
பறந்தே போயிற்றன பணிமனையில்
நீங்களிருந்த இடம் வெறிச்சென்று கிடக்கிறது
வெற்றிடத்தை வெறுமையாக காணும் போதெல்லாம்
துடிக்கிறதே எம்மனம்
விழிமுட்டி வரும் கண்ணீரை
என்செய்வோம் உங்கள் நினைவுகள்
என்றும் இருக்கும் எம்மோடு
உங்கள் ஆன்மா சாந்திபெறுக
இத்துடன் இவ் அனர்த்த நிகழ்வின்போது
சாவடைந்த ஏனைய பொது மக்களையும் நினைவு கூருகிறோம்
ஓம் சாந்தி!!!

மழலை பு. பிரவீன்



துணைவர் மு. யோகரெட்ணம்
(அலு. உதவி)

அருமைச்செல்வம்
யோ. மருட்சாயனன்

மாகாணசபை கணக்குக்கிளை
கணக்காய்வுக் கிளை,
கச்சேரி,
முல்லைத்தீவு.

(சி-11092)

## அலைவந்தபோது ஆகுதியாகிவிட்ட அணையாத தீபங்களின்...

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்திபோட்டி அழைப்பும்







**அமரர் இராசையா – மகேஸ்வரி**
வத்திராயன்-வடக்கு
தாளையடி

**இவரின் பேத்தியார்**

**இரவீந்திரராசா–ஜெசி**
உடுத்துறை -வடக்கு
தாளையடி

[கடந்த 26.12.2004ல் இடம் பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது இயற்கை எய்தினர்]

*துடிக்கின்றோம் அம்மா அம்மா என்று– இன்று*
*நீங்கள் இல்லையம்மா அரவணைத்து ஆறுதல்சொல்ல*
*எங்களுக்கு உலகமே நீங்கள் தானே அம்மா*
*இடையில் கடலலை பறித்து விட்டதே உங்களை*
*அன்போடு ஊட்டி ஊட்டி எமை ஆளாக்கினீர்களே*
*அலை வந்தபோது எங்களால்*
*காப்பாற்ற முடியாது போனதே உங்களை*
*நொந்து போகவில்லையம்மா நாம் நொருங்கிவிட்டோம்*

*எம் அன்புச் செல்வமே ஜெசி.*
*ஆறியிருக்க முடியவில்லை உன் அன்னையால்*
*அருகிருந்த தம்பியும் அக்கா என்று அழுகிறான்*
*அலைவந்தபோது அப்பம்மாவுடன் சென்றாயோ*
*பிஞ்சினில் அப்பாவைப்பிரிந்து நெஞ்சினில் அம்மாவைச் சுமந்து*
*அம்மாவின் சிறகுக்குள் சிரித்த மலரே*
*அப்பா வருமுன்னே வாடி விட்டதேனோ?..*

***உங்கள் ஆத்மசாந்திக்காக என்றும் ஈரவிழிகளுடன் இரந்து பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி... சாந்தி ... சாந்தி...***

எமது அன்புத் தெய்வத்தினதும் அன்புச் செல்வத்தினதும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று 25.01.2005 (செவ்வாய்க்கிழமை) எமது தற்காலிக இல்லத்தில் நடைபெற இருப்பதால் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
**அன்புப் பிள்ளைகள்,**
**சித்தப்பாமார்.**

து.மு.மூலிகைத்தோட்டம்,
முதலாம் பகுதி,
திருவையாறு, கிளிநொச்சி.

(5602)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி





**திருமதி அந்தோனிப்பிள்ளை செபமாலை**

தாயினால் மண்ணில் 26.10.1931 — பரவையால் விண்ணில் 26.12.2004

**செல்வன் அன்ரன் ஜதுர்ஷன்**

தாயினால் மண்ணில் 30.07.1996 — பரவையால் விண்ணில் 26.12.2004

*அன்பு மகனே! அம்மாவே*
*ஆழியின் கொடுரத்தில் நொடிப் பொழுதில்*
*மறைந்தீர்களே மகனே! உன்*
*குறும்புகள் அடிக்கடி வந்து*
*துன்பப்படுத்துகின்றதே உங்களின் பிரிவால் துன்பத்தில் துடிக்கின்றோம்.*

எம் பாச மலர்களின் திடீர் மறைவு கேட்டு எம்மை ஆற்றுப்படுத்தியோர், எமக்கு உறுதுணை புரிந்தோர், இறுதி நிகழ்வினில் பங்கேற்றோர். எம் உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டோர், அனைத்தும் இழந்து நாம் தவித்த வேளை தேவையறிந்து எமக்கு உதவியோர் அனை.வருக்கும் எம் உணர்வு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பிரிவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள்,

செ.அன்ரன்
வண்ணாங்குளம்,
முல்லைத்தீவு.

(5601)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாய்மடியில் 1993 * 02 * 26



கடல்மடியில் 2004 * 12 * 26

**சௌந்தரராஜா லக்சனா**
**மருதங்கேணி வடக்கு**

2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலையினால் உயிர் பிரிந்த எமது அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்!

தகப்பன்
**து.தாடிராசன்**

மருதங்கேணி
வடக்கு

(5599)

## 31 ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை





**சிவகுமார் அருண்ஜொய்சன்**
தோற்றம் 23.07.1997

**சிவகுமார் அனோஜிதா**
தோற்றம் 21.02.1999

மறைவு 26 . 12 . 2004

தம்பி:-
மண்ணிலே விளையாடி முடித்து
விண்ணிலேயும் விளையாட
குட்டியையும் கூட்டி சென்றாயோ.

குட்டி:-
காணிக்கை காணிக்கை என்று பாடுவாயே
ஆண்டவருக்கு உங்களை காணிக்கையாக்க
வந்ததோ இந்தச் சுனாமி

எம்கண்களில் நிறைந்த செல்வங்களே உங்களை இறைவனுக்கு அர்ச்சனை மலர்களாக்குகிறோம்.

அன்று விண்ணுலகைஅடைந்த அனைவருக்கும் எமது கண்ணீரை அஞ்சலியாக்குகின்றோம்.

பெற்றோர்,
உறவினர்.

(5468)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 27 ✝ 12 ✝ 1954



இறப்பு 26 ✝ 12 ✝ 2004

**வேணுகோபால் யோகேஸ்வரி (லீலா)**
**அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி**

எமது குடும்பத்தின் குலவிளக்காய்
அன்புத்தெய்வமாய்
ஆருயிர் பாசமாய்
எமது சுமைகளை வாழ்நாள் முழுவதும்
எமக்காக சுமந்து இன்று
தெய்வமாகிவிட்ட எமது
அன்னையின் பாதக் கமலங்களுக்கு
மலர் அஞ்சலிகள்.

தகவல்:-
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

சிவன்கோவிலடி,
புதுக்குடியிருப்பு.

(5658)

-சுனாமி நலநிதி கிரிக்கெட்-

# நியூசிலாந்துக்கு எதிரான 2 ஆவது போட்டியில் உலக 11 பேர் அணிக்கு 3 விக்கெட் வெற்றி



சுனாமி பாதிப்பிற்குள்ளான வர்களுக்காக நிதிதிரட்டும் கிரிக்கெட் ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற நியூசிலாந்து, உலக 11 பேர் அணிகளுக்கிடையிலான போட்டியில் உலக அணி 3 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது. இதனால் நியூசிலாந்து அணி வீர் நதன்ஆஸ்லே எடுத்த 109 ஓட்டங்களும் பயனற்றுப்போனது

நியூசிலாந்தின் வெலிங்டனில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி 50 ஓவர் முடிவில் நதன்ஆஸ்லேயின் 109 ஓட்டங்களின் உதவியுடன் 256 ஓட்டங்களைப் பெற்றது. மத்தியுசின் கிளையர்,சிறேக் மக்மிலன் ஆகியோர் இணைந்து 30 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தனர்.

பதிலுக்கு 257 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கில் ஆடிய உலக 11 பேர் அணி ஆரம்பத்திலிருந்தே நியூசிலாந்து வீரர்களின் பந்து வீச்சை நிதான



மாக எதிர்கொண்டு ஆடி 7 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து, 257 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. உலகஅணியில் மத்தியு



இலியாட்டும் (57) குமார்சங்கக்காரவும் (51) அரைச்சதத்தை எட்டினர். போட்டியில் சிறப்பாட்டக்காரராக மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் பெற்ற அண்டிபிச்சவ்தெரிவானார்.

இந்த வெற்றி மூலம் இரு அணிகளும் 1-1என்ற சமநிலையில் உள்ளன. இதனால் நாளை நடைபெறும் இறுதி ஒரு நாள் போட்டி மிகவிறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி; தொடரைக் கைப்பற்றும் நிலையில் இங்கிலாந்து

தென்னாபிரிக்க-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நடைபெற்று வரும் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வலுவான நிலையை அடைந்துள்ளது.

29 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இங்கிலாந்து பின்னர் சுதாகரித்துக்கொண்டு பிளின் டொப், தோப்பின் சிறப்புத் துடுப்



பாட்டத்தின் மூலம்359 ஓட்டங்களைப் பெற்றது. துடுப் பாட்டத்தில் தோப் 86 ஓட்டங்



களையும்,பிளிண்டொப் 77 ஓட்டங்களையும் அன்ரூஸ் ரோஸ் 44 ஓட்டங்களையும், ஜோன்ஸ் 50 ஓட்டங்களையும் கைல்ஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பொலக் இரண்டு விக்கெட்டுக்களையும் நில் 6 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

போட்டியின் நான்காம் நாளான நேற்றைய ஆட்டநேர நிறைவில் தென்னாபிரிக்கா 2 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக தென்னபிரிக்க தனது முதல் இனிங்சில் 247 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இன்றுபோட்டியின் இறுதி நாளாகும் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தால் இங்கிலாந்து போட்டித்தொடரைக் கைப் பற்றிவிடும்.

## எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சோம்

பாக்-கிரிக்கெட் சபை



இந்தியாவுக்கு தமது அணி சுற்றுலா செல்வதை சிவசேனா கட்சி, தீவிரவாதிகள் ஆட் சேபித்தாலும் இந்திய கிரிக்கெட்சபை தங்கள் அணியை பாதுகாக்கும் என்பதில் நிறைய நம்பிக்கையிருப்பதாக பாகிஸ்தானிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட்சபைத் தலைவர் சகாரியார்கான் மேலும் கூறும் போது;அச்சுறுத்தல்களால் நாம் பாதிப்படையப்போவதில்லை. குறிப்பிடப்பட்ட இடங்களின் பாதுகாப்புக்கென சபை ஊழியர்களை நியமிக்கும் என்றும் இது போன்றே இந்திய அணி தமது நாட்டுக்கு சென்ற வருடம் முற்பகுதியில் வருகை தந்தபோது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டதையும் அவர்குறிப்பிட்டுள்ளார். சிவசேனாகடந்த 1999ஆம் ஆண்டு டில்லியின் பெரோஸ்ஷா கொல்டா மைதானத்தை அழித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# 31 ஓட்டங்களால் பங்களாதேஷை தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது சிம்பாப்வே அணி

பங்களாதேஷிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் சிம்பாப்வே அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது

இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை சிம்பாப்வே அணி கைப்பற்றியது.

சிட்டகொங்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்




சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் றொக்கோஸ் 66 ஓட்டங்களையும் அணித் தலைவர் தைபு ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும், சிக்கும்புறா ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இனாமுல் ஹக்இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 238 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் 47.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களையே பெற்றது.

துடுப்பாட்டத்தில் இக்பால் 58,கபிபுல்பசார் 44 ஓட்டங்களையும் மசூட் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் பொபூ, கொண்டோ, றொக்கோஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் பன்னியங்காரா, உட்சயா,தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக றொக்கோஸ் தெரிவானார்.




## சிறந்த வீரராக பதான்



2004 ஆண்டின் சிறந்த சர்வதேச விளையாட்டு வீரராக இந்தியாவின் இடதுகை பந்து வீச்சாளரான இர்பான் பதான் தேர்வு செய்யப் பட்டார்.

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் நேற்று முன்தினம் நடந்த பிரமாண்டவிழாவின் போது இதற்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும், விக்கெட் கீப்பருமான பரூக் இன்ஜினியருக்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டது. சோனிஎன்டர் டெயின் மென்ட் டெலிவிஷன் இதற்கான விருதுகளை அளித்து வருகிறது. சிறந்த வீரருக்கான தேர்வில், இந்திய இளம்வீரர் பதான், இலங் கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மற்றும் பிஜிதீவுகளின் உலகநம்பர் 1 கோல்ப்வீரர் விஜய்சிங் ஆகியோரைப்பின்னுக்குத் தள்ளி முதலிடத்தை இர்பான் பதான் கைப் பற்றினார்.

# அவுஸ்.ஓபன் இரட்டையர் போட்டி மகேஸ்பூபதி ஜோடி காலிறுதிக்கு தகுதி



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் போட்டியின் காலிறுதிக்கு பூபதி உட்பிரிட்ஜ் ஜோடி தகுதி பெற்றது. மெல்பேர்ன் நகரில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதிக்கு முந்தைய சுற்றுப்போட்டியில் பூபதி உட்பிரிட்ஜ் ஜோடியும்,ஸ்பெயின் ஜோடியும் மோதின.

இதில் இந்திய அவுஸ்திரேலிய ஜோடி 4-6,7-6,(7/2),6-4 என்ற செட்கணக்கில் ஆல்பர்ட்கோஸ்டாரபேல் நாடல் இணையை வீழ்த்தியது.

இந்த நான்காவது சுற்றுப்போட்டி சுமார் ஒரு மணி 30 நிமிடங்கள் நீடித்தது. இப்போட்டியில் பூபதி உட்பிரிட்ஜ் ஜோடி கடும் போராட்டத்திற்குப் பின்பே வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக காலிறுதிப் போட்டியில் பூபதி உட்பிரிட்ஜ் ஜோடியும்,சிம்பாப்வேயின் கெவின் உல்லியெட்வெய்ன் பிளாக் இணையும் மோதவிருக்கின்றன.

## லீக் கால்பந்து தொடர் போட்டி செல்சியா தொடர்ந்தும் முன்னிலையில்



முன்னணி கழக அணிகள் பங்கேற்கும் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடக்கிறது. நேற்று முன் தினம் நடந்த லீக் போட்டியில் செல்சியா, போர்ட்ஸ்மவுத் அணிகள் மோதின. திடைர் டிரோக்பா சிறப்பாக ஆடசெல்சியா 3-0 என்றகோல் முன்னிலையில் வெற்றிபெற்றது. திடைர் இரண்டு கோல்களும் ,அர்ஜன்ரோபன் ஒரு கோலும் அடித்தனர். இதுவரை செல்சியா அணி 24 போட்டிகளில் விளையாடி 61புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறது. இதன் மூலம் 50 ஆண்டுகால பிரிமியர் கால்பந்து வரலாற்றில் முதன்முறையாக செல்சியா கோப்பையை வெல்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. மற்றுமொரு ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் 3-1 என்றகோல் முன்னிலையில் அஸ்டன்வில்லா அணியை வீழ்த்தியது.

## கோரஸ்செஸ் சம்பியன் போட்டி ஆனந்த் ஹட்ரிக் வெற்றி



நெதர்லாந்தில் நடைபெற்று வரும் கோரஸ் செஸ் போட்டியின் 7 ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர் விசுவநாதன் ஆனந்த் வெற்றி பெற்றார். இது அவர் பெற்ற 3 ஆவது வெற்றியாகும்.

கோரஸ் செஸ் போட்டி நெதர்லாந்து நாட்டில் நடைபெற்று வருகிறது. இதன் 7 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய கிராண்ட் மாஸ்டர் விசுவநாதன் ஆனந்த் கியூபா கிராண்ட் மாஸ்டர் லசரோ புருசோனை எதிர்கொண்டார்.

இதில் 44 ஆவது காய் நகர்த்துதலில் ஆனந்த் வெற்றி பெற்றார். இதன் மூலம் ஆனந்த் தொடர்ந்து 3 வெற்றிகளைக் குவித்து 'ஹட்ரிக் சாதனை படைத்தார். 7 ஆவது சுற்றின் முடிவில் ஆனந்த் மொத்தம் 4.5 புள்ளிகள் பெற்றுள்ளார்.

பீட்டர்லெகோ (ஹங்கேரி), மைக்கேல் அடம்ஸ் (இங்கிலாந்து), வெஸ்லின் தபலோவ் ஆகியோரும்4.5 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ளனர்.

## கிப்ஸீக்கு அபராதம்

தென்னாபிரிக்க அணியின் முன்னணிஆட்டவீரர்களில் ஒருவர் கிப்ஸ் இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியின் போது இவர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார். இதற்காக கிப்ஸுக்கு இரண்டு இலட்சம் இந் திய ரூபா அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா இடையேயான 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. தென்னாபிரிக்கா முதல் இனிங்சில் 247 ஓட்டங்களை எடுத்தது.

## சிந்தனைக்கு



நாம் அரசியல் வாதிகளல்லர்;
நாம் புரட்சிவாதிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## அங்கீகாரம் இன்றேல்.....!

"சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் புனரமைப்பு நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை இணைத்துக் கொள்வதை நாம் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்ற ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் கூற்றுக்கள் ஒன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு ஏதோ ஒரு காரணத்தை அவர்கள் கண்டுபிடிக்கவும் கூடும்.

இந்தவகையில் ஜே.வி.பி யின் தலைவர் கண்டுபிடித்துள்ள காரணமானது ஒழுங்கான அரசு அதன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஆயுதம் தாங்கிய இயக்கம் ஒன்றை உள்ளடக்க முடியாதெனவும், அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுவார்களேயானால், ஆயுதம்தாங்கிய இயக்கத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வதாக அமையும் என்றும் தெரிவித்ததோடு அதனை மக்கள் விடுதலை முன்னணி எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுருக்கமாகக் கூறுவதானால் நிவாரணப் பணிகளில் புலிகளை இணைத்துக்கொண்டால் அவர்களை அங்கீகரித்ததாகிவிடும். இதனை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளமாட்டாது என்பதே சோமவன்ச அமரசிங்கவின் அறிவிப்பாகும். ஜே.வி.பி யின். இந்நிலைப்பாடானது ஆச்சரியத்திற்குரியதல்ல. ஆயினும் ஜே.வி.பியின் இத்தகைய கீழ்மட்ட அரசியல் ஒன்றை நடாத்த விளைந்துள்ளமையானது அதன் கையாலாகாத் தனத்தையே காட்டுகிறது.

அது மட்டுமன்றி ஜே.வி.பி கண்டுபிடித்துள்ள காரணங்களைக் கூறுவதற்கு ஜே.வி.பிக்கு எந்தளவிற்கு அருகதை உண்டு? ஜே.வி.பியையும் அதன் தலைவர் சோமவன்சஅமரசிங்கவையும் ஒரு ஒழுங்கான அரசு/ சட்ட பூர்வமான அரசு ஏற்றுக்கொள்ள முடியுமா? என்ற கேள்வியும் எழக்கூடும்.

ஜே.வி.பி இயக்கம் இரு தடைவைகள் ஆயுதக் கிளர்ச்சி செய்து தோற்றுப்போனதொன்றாகும். இதெற்கென பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் பலியிட்ட இயக்கமாகும். ஆனால் அதன் பின்னர் சனநாயக நீரோட்டத்திற்கு என ஜே.வி.பி திரும்பியமையானது ஒரு புறத்தில் அதன் இயலாமையும் மறுபுறத்தில் இரண்டு பிரதான சிங்களக்கட்சிகளும் ஜே.வி.பியை வைத்து அரசியல் நடாத்த முற்பட்டதன் விளைவுமே ஆகும். இதில் இரண்டு பிரதான கட்சிகளும் ஜே.வி.பியை வைத்து அரசியல் நடத்த விளையாது அரசாங்கங்கள் சட்டபூர்வமானவையாக நடந்துகொண்டிருப்பின் ஜே.வி.பியின் தற்போதையத் தலைவர் சோமவன்ச அமர சிங்க இன்று தென்னிலங்கையில் நின்று அரசியல் தான் பேச முடியுமா? அன்றி வேறு ஜே.வி.பியினர் தான்அரசியல் நடத்த முடியுமா?

ஜே.வி.பிக்கு சட்டத்தின் முன்னால் பதிலளிக்க வேண்டிய பல கேள்விகள் உள்ளன. பல்லாயிரக்கணக்கான மக்களின் தேசிய அடையாள அட்டைகளைப் பறித்தெடுத்ததிலிருந்து பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் படுகொலைக்குக் காரணமாக இருந்ததோடு பல அரச படையினரின் படுகொலைகளுக்கும் காரணமாக இருந்தது. மேலும் பல கோடிரூபா சொத்துக்களை கொள்ளையிட்டதோடு பல பல ஆயிரம் கோடி ரூபா சொத்தழிவையும் நாட்டிற்கு ஏற்படுத்தியிருந்தது.

இவை ஒருபுறமிருக்க தற்போதைய ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க குடிவரவு–குடியகல்வுச் சட்டதிட்டங்களுக்கு விரோதமாக நாட்டைவிட்டு கள்ளத்தனமாக தப்பியோடியவராவார். இவர் நாட்டிற்குள் திரும்பி வந்து சேர்ந்தபோதே அவர் சட்டத்திற்கு முன்னால் நிறுத்தப்பட வேண்டியவராகும். ஆனால் இவை யாவும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. இதற்கு ஆளும்கட்சியாக இருந்தவர்கள் தமது அதிகார அபிலாசைகளுக்காக சட்டத்தை வளைத்தெடுத்தமையே காரணமாகும்.

இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கும் சட்டத்திற்கு விரோதமாகச் செயற்பட்டதுமான ஜே.வி.பியும், ஜே.வி.பி தலைவரும் தற்போது நாட்டில் சட்டத்தைப் பற்றியும் ஒழுங்கான அரசாங்கத்தைப் பற்றியும் பேசுவதுதான் வேடிக்கையானதாக உள்ளது.

அதுமாத்திரமல்ல ஜே.வி.பியின் முன்னைய நடவடிக்கைகள் எவ்வாறு தேசவிரோதமானதோ அதே போன்று தற்பொழுதும் அதன் நடவடிக்கையும் தேசவிரோதமானதாகவும் நாட்டின் ஐக்கியத்திற்கு ஊறு விளைவிப்பதாகவுமே உள்ளது. அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தை புனர்நிர்மாணப் பணியில் இணைத்துக்கொள்ளாது விடுதல் என்பது ஜே.வி.பி கூறுவது போன்று ஆயுதம்தாங்கிய இயக்கத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டதாக அமையலாம். ஆனால் இது ஜே.வி.பி கூறுவது போன்று நாட்டிற்கு பாதகமானதாக அமையமாட்டாது. நன்மையே பயக்கத்தக்கதாகும்.

ஏனெனில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சிறிலங்கா ஆட்சியாளர்கள் இனியும் அங்கீகரிக்காது போனால் அதனால் ஏற்படப்போகும் பாதகமானது சிறிலங்கா அரசிற்கானதே ஆகும். அதாவது புலிகள் இயக்கம் மீளக்கட்டியெழுப்பும் பணியிலும் அங்கீகரிக்கப்படாது போனால் இலங்கையில் தனிநாடு ஒன்று உருவாகுவது தவிர்க்கமுடியாது போகும்.

# மக்களின் வாழ்வியலை கட்டியெழுப்பாத அரசு கரையோர படைநிலைகளைப் பலப்படுத்துகிறது

### — தமிழ்க் கூட்டமைப்பு பா.உ சிவாஜிலிங்கம் —

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசவாழ் மக்களது வாழ்வியலை மீளக்கட்யெழுப்புவதற்கு எது வித உதவிகளையும் மேற்கொள்ளாத சிறிலங்கா அரசு குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவநிலைகளைப் பலப்படுத்துவது மற்றும் அவற்றை விஸ்தரிப்புச் செய்வது போன்ற நடவடிக்கைகளில் அதி தீவிர அக்கறை காட்டி வருகிறது. இவ்வாறு யாழ் மாவட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டினை மீளக்கட்டியெழுப்புவது சம்பந்தமாக அரசு மேற் கொண்டுவரும் தமிழர் தாயகப் பகுதிகள் மீதான புறக்கணிப்புகள் பற்றி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ் குடாநாட்டு மக்களுக்கு நிவாரண மற்றும் மீள்கட்டுமான உதவிகள் வழங்கப் படுவதாக பிரசாரப்படுத்தி வரும் அரசு எந்த விதமான மனிதாபிமான உதவிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இதுவரையில் வழங்கவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் முற்று முழுதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவிகளிலேயே தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள அகதிமுகாம்களுக்கு மலசல கூடவசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை கூட அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

இந் நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள கடற்படையினரது கடலோர நிலைகள் மும்முரமாகப் புனரமைக்கப்பட்டு முன்னர் இருந்ததை விட இராணுவ நிலைகள் பன் மடங்காகப் பலப்படுத்தப் பட்டுள்ளன. இராணுவநலன்களைப் பேணும் நடவடிக்கைகளுக்கான உதவியை அரசு பன்மடங்காக வழங்கிவருகின்றது இந்நிலைமையை எம்மால் ஒரு போதும் ஏற்கமுடியாது என கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (33)

# வடமராட்சி முனைப்பகுதியில் வீடு தேடும் சி.படையினர்

வடமராட்சியின் பருத்தித்துறை முனைப் பகுதியில் அமெரிக்க கடற்படையினரை தங்க வைப்பதற்கு ஏதுவாக கட்டடமொன்றைத் தேடுவதற்கு உரியதரப்புகளால் பெரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பருத்தித்துறை முனையின் தும்பளைப் பகுதியினுள் கடற்கரையைஅண்டியதாகவும், பிரதான வீதியினை அண்மித்ததா கவும் இருக்கக் கூடியதாக இக்கட்டம் அமைத்திருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் தற்போது மந்திகை அரசினர் வைத்திய சாலையில் பணியாற்ற வருகைதந்திருக்கும் அமெரிக்க கடற்படையின் வைத்தியப் பிரிவினரை தங்க வைக்கவெனவே இக்கட்டடம் தேவைப்படுவதாக தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன. தற்போது யாழ். நகரப்பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்க வைக்கப் பட்டுள்ள இம் மருத்துவக் குழுவினர் காலை வேளையில் வாகனங்கள் மூலம் மந்திகைக்கு அழைத்துவரப்பட்டு பின்னர் மாலை வேளையில் குறித்த விடுதிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்நிலையில் இரண்டு வார காலங்கள் மட்டுமே யாழில் தாம் தங்கியிருக்கப் போவதாகக் குறித்த அமெரிக்க கடற்படையின் மருத்துவப் பிரிவு அதிகாரிகள் ஊடகங்களிற்குத் தெரிவித்துள்ள நிலையில் தற்போது மேற்கொள்ளப்படும் இடம் கோரும் பணிகள் பலத்த சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

பெரும்பாலும் "சுனாமி" கடற் கொந்தளிப்பினால் குறித்த இப்பகுதிகளும் பெரும் அழிவுகளுக்கு உள்ளாகியிருப்பதுடன் மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர். எனினும் அவ்வாறு சுனாமி தாக்குதலில் சிக்குப்படாது எஞ்சியுள்ள குடியிருப்புக்கள் சிலவற்றைத் தமக்கு தந்து உதவுமாறே தற்போது கோரப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (27)

### — ரஷ்ய டிப்ளோமாப் பயிற்சி பெற்றவர்களை —

# மருத்துவர்களாக இணைப்பதற்கு எதிராக இன்று மருத்துவர்கள் போராட்டம்

(கொழும்பு)

6 மாத காலம் கற்கை நெறி எனப்படும் டிப்ளோமா பயிற்சிப் பெற்றவர்களை மருத்துவர்களாக இணைத்துக்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் இலங்கையில் மருத்துவர்கள் பணப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளார்கள் சுனாமி பாதிப்பு ஏற்பட்ட இடங்களை தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதன் காரணமாக இன்று வைத்திய சேவைகள் முழுமையாகப் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது இலங்கையில் மருத்துவர் சேவைக்கு 6 வருடங்கள் பயில வேண்டும் எனினும் ரஷயாவில் 6 மாத பயிற்சி பெற்றவர்களை வைத்திய சேவையில் அரசாங்கம் இணைத்துக் கொள்வதை ஆட்சேபித்தே இப் போராட்டம் இடம்பெறவுள்ளது (32)

# இயற்கை அழிவுகள் தொடர்பில் முன்னறிவித்தல் பெற திட்டங்கள்

### — ஜப்பானில் முடிவெடுக்கப்பட்டதாக திஸ்ஸவித்தாரண தெரிவிப்பு

(கொழும்பு)

இயற்கை அழிவுகள் தொடர்பில் யப்பான் கோபே மகாநாட்டில் திடமான முடிவுகளை எடுத்துள்ளதாக அமைச்சரும் பேராசிரியருமான திஸ்ஸவித்தாரண தெரிவித்துள்ளார். இந்து சமுத்திரத்தில் சுனாமி மட்டுமல்லாமல் புயல்கள் நில அதிர்வுகள் உட்பட இயற்கைச் சீற்றங்கள் பற்றி முன்னறிவித்தல் பெறக்கூடிய திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இந்த அமைப்பை உள்நாட்டு அமைப்புகளுடன் தொடர்புபடுத்தும் வலை அமைப்பொன்றை உருவாக்கவுளளதாகவும் தெரிவித்தார்..

இவ்வலை அமைப்பு பிராந்திய அமைப்பாக இருக்கும். இதே வேளை நாட்டைக் கட்டி எழுப்புவது தொடர்பாகவும் அந்த யப்பான் மகாநாட்டில் பேசப்பட்டதாக பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார். (32)

# ஐ.தே.க.பா.உ.களை அரசு பழிவாங்குகின்றது

### — ஐ.நா.வில் முறையிட ஐ.தே.க முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் பழிவாங்குவதாகக் கூறி அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் நிமித்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன இன்று ஜெனீவா செல்லவுள்ளார்.

அத்துடன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்ப ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ள 15 வருட திட்டம் தொடர்பிலும் அவர் ஐக்கிய நாடுகள் சபையினருக்கு விளக்கம் அளிக்கவுள்ளார். (32)



நேற்று விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட அரச உயரதிகாரிகளில் ஒரு பகுதியினர்.

# நில நடுக்கத்திற்கான அறிகுறிகள் இல்லாவிடினும் கடும் மழை நேரத்தில் அவதானம் வேண்டும்

## -முத்தரிப்புச் சம்பவம் குறித்து நிலவியல் ஆய்வாளர்

மன்னார் பிரதேசத்தில் நில நடுக்கம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லாதபோதும் கடுமையான மழை ஏற்படும் போது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று நிலவியல் ஆய்வாளர் சி.ஏச்.சி.ஆர் சிறிவர்த்தன நேற்று மன்னார் முத்தரிப்புத் துறைப் பகுதியில் வைத்துத் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட அனர்த்தம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கு என்று கொழும்பில் இருந்து வந்த தீபானி வீரக்கோன், சி.ஏச்.சி.ஆர் சிறிவர்த்தன, ஆகியோர் மன்னார் முத்தரிப்புத்துறைப் பகுதிக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். பாதிக்கப்பட்டவீடுகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு, பின்னர் அருவி ஆறு கடலுடன் சங்கமிக்கும் முகத்துவாரம் பகுதிக்கும் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். இதன் பின்னர் தமது ஆய்வுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது சி.ஏச்.சி.ஆர் சிறிவர்த்தன,

மன்னார் மாவட்டத்தில் நில அதிர்வு ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. இங்கு இடம்பெற்றிருக்கும் நிலவெடிப்புகளைப் பார்க்கின்றபோது ஒரே திசையில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே பல வெடிப்புக்களும் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எங்களின் ஆய்வு தொடர்பாக முழுமையான தகவலை வெளியிட முடியாத போதும், தற்போது உள்ள நிலைமையைப் பொறுத்தமட்டில் நிலத்தின் கீழ் உள்ள மண்ணில் ஒரு மாற்றம் அல்லது அசைவு ஏற்பட்டுள்ளது. அல்லது நிலத்தின் கீழ் அதிகளவான நீர் ஓட்டம் ஏற்பட்டுள்ளது இவைதான் காரணமாக இருக்கும் என்று நாங்கள் தற்போது கருதுகின்றோம். இந்த முத்தரிப்புத் துறைப் பிரதேசமானது ஒரு பகுதியில் கடலாலும், மற்ற பகுதி அருவி ஆறினாலும் சூழப்பட்டுள்ளது. அத்துடன் மணல் பிரதேசமாகும். எனவே நிலஅதிர்வு ஏற்பட்டமைக்கான அறிகுறிகளும் இல்லாத போதும் இது தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டியது முக்கியமானது.நாங்களும் அவதானமாக இருப்போம்.

அதேவேளை அதிகளவான மழை ஏற்படும்போது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆய்வினை மேற்கொண்ட பின்னர் வெடிப்பு ஏற்பட்ட பகுதியில் இருந்து ஆய்வுக்கான மண் எடுத்துச் சென்றுள்ளனர். இந்த ஆய்வு மேற்கொண்ட சமயம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், உதவி அரச அதிபர் ஏ.நிக்லாஸ்பிள்ளை, முசலி பிரதேச செயலாளர் க.அ. சந்திரய்யா, நியாப் பொறியியலாளர் பி.எம். ஜெயசீலன்,கடற்புலிகளின் முசலி பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் இளவழகன், முசலி பிரதேச தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் சு. நடா மற்றும் பல அதிகாரிகளும் கூட இருந்தனர்.(21)

# ‘சுனாமி’ நிவாரண நடவடிக்கைகளில் அரசால் முஸ்லிம் மக்கள் புறக்கணிப்பு

## - கிண்ணியா முஸ்லிம் அமைப்புக்கள் சம்பந்தனிடம் முறையீடு

(திருகோணமலை)

கிண்ணியா உலமா சபை, கிண்ணியா இஸ்லாமிய வாலிப முன்னணி, செரண்டிப் பௌண்டேசன் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொண்ட தூதுக்குழு கிண்ணியா உலமா சபையின் தலைவர் மௌலவி கே. உதுமாலெப்வை தலைமையில் நேற்றுக் காலை திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா சம்பந்தன்,க.துரைரட்ணசிங்கம் ஆகியோரைச் சந்தித்து திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் வழங்கும் விடயத்தில் புறக்கணிப்புக்குள்ளாகியிருப்பதாக முறையிட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தனின் இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. தூதுக் குழுவினர் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

“ எங்கள் பகுதியை நாம் வளப்படுத்துவதைச் சகிக்க முடியாத சக்திகள் முஸ்லிம்,தமிழ் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதில் முயற்சிக்கின்றனர். இந்த ஆபத்தான சூழ்நிலையில் முஸ்லிம் தமிழ் மக்களுக்கிடையேயான ஒற்றுமை இறுக்கமாகப் பேணப்பட வேண்டும். இது இன்றியமையாததாகும். நாட்டின் மத்திய, மேற்குப் பிரதேசங்கள் வளர்ச்சி கண்டுள்ளன. சுனாமியின் பின்னர் தென்பகுதியைக் கட்டியெழுப்புவதில் தீவிரம் காட்டப்படுகிறது. ஆனால் வடக்கு கிழக்கு தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் நிலைக்கு உள்ளாக்கியுள்ளது.”என்று தூதுக் குழு மகஜரில் தெரிவித்துள்ளது.

கிண்ணியா தம்பலகாமம்,ஆலங்கேணிப் பிரதேசங்களில் நெற்செய்கை முற்றாக அழிந்து விட்டது. சுனாமியால் தனியார் நிறுவனங்கள் அழிந்துவிட்டன. ஆரம்பத்தில் பொலிஸ் நிலையங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பதியப்பட்டன. நிவாரணம் வழங்கப்படும்போது அப்பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் என்று பொலிசாரால் கணிக்கப்பட்டவர்கள் தற்போது ஏன் புறக்கணிக்கப்படுகின்றார்கள்? மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் இதற்குப் பரிகாரம்காண நடவடிக்கை எடுங்கள் என்று மகஜரில் கோரப்பட்டிருந்தது.

பின்னர் தூதுக்குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுனாமி அழிவு தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் திருகோணமலை மாவட்ட செயலணியில் நிச்சயம் முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டும். முஸ்லிம் மக்களுடைய உரிமைகள் வழங்கப்பட்டேயாகவேண்டும். முஸ்லிம் மக்களைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியாது என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். பிரிந்து நிற்காமல் ஒற்றுமையாக நின்று சுனாமியால் அழிந்துபோன எமது பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமென்று சம்பந்தன் கேட்டுக்கொண்டார். (25)

### தொண்டமானுக்கு....

தரப்பு அச்சம் கொண்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே தொழிலாளர் காங்கிரஸிற்கு மேலும் இரு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு சனாதிபதி தயக்கம் காட்டி வருவதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட வேண்டிய அமைச்சுப் பதவி இதுவரை வழங்கப்படாமை தொழிலாளர் காங்கிரஸ் உயர் மட்டத்தில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாக தெரியவருகின்றது.

இந்த விடயம் குறித்துப் பேசுவதற்கு சனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் தொழிலாளர் காங்கிரசுடனான சந்திப்பிற்கு சனாதிபதி இதுவரை நேரம் ஒதுக்கிக் கொடுக்கவில்லை என்றும் இதனால் அரசாங்கத்திலிருந்து விலகுவது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### வடக்கு ...

அதிபர்கள்,திணைக்களத் தலைவர்கள், வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதி நிதிகள் ஆகியோர் உள்ளடங்கலாக சுமார் 120 பேர் கலந்து கொண்ட இம் மாநாட்டில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் உரையாற்றினார்.

# புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றுள்ளது. மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம்தரப்பில் பள்ளி வாசல்களின் சம்மேளனத்தலைவர் அப்துல் ஜப்பர் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப்பணிமனையில் காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகவும், சந்திப்பு சுமுகமாக நடைபெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்குத் தலைமை வகித்த அப்துல் ஜப்பர் தெரிவிக்கையில் இன்றைய சந்திப்பு ஆரோக்கியமானதாகவும் திருப்திகரமானதாகவும் நடைபெற்றதாகத் தெரிவித்தார்.

# முல்லை நகரில் வீதி விபத்தில் பெண் ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற வீதி விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுகுடியிருப்பு வைத்திய சாலைக்கு அனுப்பட்டார்.

சிலாவத்தை மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தராணி (வயது 48) என்ற 5 பிள்ளைகளின் தாயாரே இவ்விபத்தில் படுகாயமடைந்தவராவர்.முல்லைத்தீவு காவல்ப்பணிமனையில் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் (20)

# வாகன இலக்கத் தகடுகளை தவறாது பொருத்தக்கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் வாகனங்களின் உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனங்கள் இலக்கத்தகடுகளை பொருத்துதல் வேண்டும் என தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் கேட்டுள்ளார்.

மோட்டார் வாகனங்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் தங்களுடைய வாகனங்களில் முன்பின் பகுதிகளில் பொருத்தமான இடத் தில் இலக்கத்தடுகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இலக்கத்தகடுகளை மிகவும் தெளிவாக எழுதப்பட்டி ருப்பதோடு வாகனங்களை செலுத்து முன் தகடுகள்பொருத் தப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து கொண்டபின் செலுத்துதல் வேண்டும். இலக்கத் தகடுகள் பொருத்தப்படாத வாகன சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

### பாதிக்கப்பட்ட...

மேலும் நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி தேசவிரோதிகள் மந்திகையில் உள்ள தமது முகாமிற்கு புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர்.

ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் முக்கிய உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவர் தற்போது சில நாட்களாக இங்கு தங்கிநிற்பதே இதற்குக் காரணம் என அறியமுடிகிறது.இவர் முன்னர் ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் கரவெட்டிப் பிரதேசப் பொறுப்பாளராவார். (கா)

### ஐந்து...

பொதுத்தேர்தல் மற்றும் சனாதிபதி தேர்தல் என்பன திட்டமிட்ட வகையில் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஆறு மாதகாலப் பகுதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் அரசாங்க முயற்சிகளுக்கு ஐக் கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### சுனாமியால்...

சுட்டான் வீதியில் ஐயனார் கோவிலுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இடம்பெறவுள்ளது. பொதுச்சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல், இறந்தவர்களுக்கான சுடர் ஏற்றல், மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தல் நினைவுரைகள் என்பன இடம்பெறவுள்ளன. இவ்வஞ்சலி நினைவுகளில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள சகல நிறுவனங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து இம்மக்களை ஆற்றுப்படுத்தும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அப்பகுதி வணிகர் கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை சுனாமி கடல் பேரலைகளால் வடமராட்சி கிழக்கில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூர்ந்து 31 ஆம் நாள் நினைவு நிகழ்வை 26 ஆம் திகதி அவர்களது உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரையும் அடக்கம் செய்த வடமராட்சி ஆழியவளை பாடசாலைக்கருகாமையில் நினைவு கூரப்படவுள்ளது இந்நிகழ்வு 26 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி மாவட்ட மக்களால், ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்று உயிரிழந்தோரின் ஆத்மா சாந்திக்கும், உறவுகளை இழந்து துன்புறும் உள்ளங்களுக்கு அமைதி வேண்டி நடாத்தப்படும் சர்வமத பிரார்த்தனை நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களின் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

அமைதி ஊர்வலம் கிளி.மாவட்ட அரச செயலகத்திலிருந்து காலை 9.00 மணிக்குப் புறப்பட்டு கலாச்சார மண்டபத்தினைச் சென்றடையும். அங்கு சர்வமதப் பிரார்த்தனை நடைபெறவுள்ளதாக செயற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

ஆழிப் பேரலையின் பேரனர்த்தத்தால் கடலின் மடியில் காவுகொள்ளப்பட்ட எம் தாயகத்து உறவுகளின் நினைவுகளுடன் சங்கமித்ததற்காய் வவுனியா நகரசபை மைதானத்தில் மாலை 6.00 மணிக்கு ஆத்மாஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில்அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் நாளை 8.30 மணிக்கு அனைத்து மதவழிபாட்டுத் ஸ்தலங்களிலும் மணியோசை எழுப்பப்படும்போது வாகனங்களில் செல்வோர் அதனை நிறுத்தி ஒரு நிமிடப்பொழுது மௌன அஞ்சலி செலுத்திச்செல்லுமாறும் வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர். (லோ,08,20)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது